# மார்னிங் டைம்ஸ்

2023

முயன்றால் முடியும்!

தமிழ் மாத இதழ்

mornningtimes@gmail.com

## சிறப்பு மலர்



தலை நிமிரும் தமிழ்நாடு



அதிரடி ஆக்ஷன் DGP






சவால்களை எதிர்கொள்ளும்

உதயநிதி



இன்றைய உலகம்

செல்போனில் அடிமையாகும் மாணவர்கள்!

# HOTEL BISMI



## ஹோட்டல் பிஸ்மி

நவீனபடுத்தப்பட்ட ஹோட்டல் பிஸ்மி பிரியாணி

ஆர்டரின் பேரில் சிறந்த முறையில் செய்து தரப்படும்

**SPECIAL MUTTON BRIYANI - Rs.220**

**SPECIAL CHICKEN BRIYANI - Rs.120**

**We Will Accept Orders**

#133, Dr.Besant Road, Ice House, Chennai - 600 014.

#184/20, T.H.Road, Triplicane, Chennai - 600 005.

#261, T.H.Road, Triplicane, Chennai - 600 005.

# 105, Dr.Besant Road, Ice House, Chennai - 600 014.

#1, Kuppa Muthu Street, Ellis Road, Triplicane, Chennai - 600 005.

#1, Kuppa Muthu Street, Ellis Road, Triplicane, Chennai - 600 005.

**044 - 42867526 | 98407 89786**



# SULAIMAN TAILORS

## LADIES SPECIALIST



## S.ABDUL RAHMAN

## Contact : 98413 73226

**No.8/41, Elephant Tank, 6th Street, Royapettah, Chennai - 14**

# மார்னிங் டைம்ஸ் ஆசிரியர் கருத்து


**ஆசிரியர்**

N.அப்துல் சமது B.Com.,

**தலைமை செய்தியாளர்**

S.அப்துல் ரஹ்மான்

**இணை ஆசிரியர்**

A.பாத்திமா பிர்தௌஸ் MBA., M.A., B.Ed.,

**துணை ஆசிரியர்கள்**

A.காஜா மொய்தீன் (அரசியல் பிரிவு)
K.N.முஹம்மது ஆரிஃப்
A.முகம்மது ரவூப்

**உதவி ஆசிரியர்கள்**

B. பூபதி
M.L. செய்யது அலி M.Phil, B.Ed.,

**மண்டல செய்தியாளர்**

K.N.அப்துல் ரஜாக்

**செய்தியாளர்கள்**

A.அப்துல் சமது (செங்கல்பட்டு மாவட்டம்)
S.கரீம் (திருவள்ளூர் மாவட்டம்)
M.G.தமீம் அன்சாரி (சென்னை வடக்கு)
S.Y. சைஃபுல்லா (சென்னை தெற்கு)
நிஜாமுதீன் (சேப்பாக்கம் தொகுதி)
A.அபிப் ரஹ்மான்(பல்லாவரம் தொகுதி)
S.முகம்மது ஷேக் (தாம்பரம் தொகுதி)

**புகைப்படக் கலைஞர்**

K. அசோக்குமார்

**சட்ட ஆலோசகர்கள்**

S.K.தமீம் அன்சாரி B.A.B.L., (திருநெல்வேலி)
M.சீனி அபுபக்கர் சித்திக் M.A.B.L., (சென்னை)
R.உதயணன் B.A.B.L., (செங்கல்பட்டு)
A.கார்த்திக் B.A.B.L., (காஞ்சிபுரம்)
C.சசிகுமார் B.A.B.L., (மதுரை உயர் நீதிமன்றம்)
E.கவியரசன் B.A.B.L., (திருச்சி)
S.முகமது இப்ராஹிம் L.L.B (சென்னை)

**வடிவமைப்பு**


Sivan Printz (Designing & Printing)



இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்க நமது நிர்வாகம் பொறுப்பல்ல. அனைத்து சட்ட சம்பந்தப்பட்ட வழக்குகளும் சென்னை நகர நீதிமன்றம் எல்லைக்குட்பட்டது.


## இன்றைய உலகம்

## செல்போனில் அடிமையாகும் மாணவர்கள்!



கொரோனா பரவல் காலத்தில், அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் அனைவரும் ஆன்லைன் மூலம் படிப்பதற்கு, 18 வயதுக்குக் கீழுள்ள மாணவர்கள், தங்கள் கையில் செல்போன் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி..' எனச் சொல்வதுபோல், திருடன் கையிலேயே சாவியைக் கொடுத்ததுபோல், ஏற்கனவே படிப்புச் சுமையால் மன அழுத்தத்தில் உள்ள மாணவர்கள், படிப்பைக் காட்டிலும் வேறு பொழுதுபோக்கு விஷயங்களுக்காக செல்போனைப் பயன்படுத்துவதற்கு, நாமே இன்னொரு வழியைத் திறந்துவிட்டதுபோல் ஆயிற்று. இதன் விளைவு, செல்போனில் கேம் விளையாடுவது, பொழுதுபோக்கு செயலிகளுக்கு அடிமையாவது என மாணவர்களை ஒருவித மாயையில் சிக்க வைத்தது. முகநூல், வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் போன்றவற்றில் 'பழகி' விபரீதங்களில் சிக்கியதும் நடந்துள்ளன. விருதுநகர் பாலியல் வழக்கிலும் செல்போனால் மூன்று சிறுவர்கள் கைதாகி, கூர்நோக்கு இல்லத்தில் அடைபட்டதும் நடந்திருக்கிறது.

தனக்கென்று ஒரு செல்போன் இல்லையென்றால், உயிர் வாழவே முடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு, தற்கொலையில் உயிரைவிட்ட சம்பவங்களும் நடந்தபடியே உள்ளன. உடல் ரீதியான, மன ரீதியான பாதிப்பும்கூட செல்போனை அதிகம் பயன்படுத்துவதால் ஏற்படுகிறது. குறிப்பாக, செல்போனிலிருந்து வெளிவரும் ரேடியேசன் அதிகமாகச் சூட்டை ஏற்படுத்தி, மூளை, காது, இதயம் போன்றவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. கண்களுக்கும் பாதிப்பை உண்டுபண்ணுகிறது. கைவிரல் தசைநார் பாதிப்பு, நினைவாற்றல் பாதிப்பு, தூக்கமின்மை எனப் பாதிப்புகள் என்னவோ, வரிசைகட்டி மிரட்டவே செய்கின்றன. கட்டுப்பாடற்ற செல்போன் பயன்பாட்டால், உலகில் குற்றங்களும், ஆன்லைன் ரம்மியில் பணத்தை இழப்பதும், விழிப்புணர்வற்ற மரணங்களும் தொடர்ந்தபடியே இருக்க, பள்ளி மாணவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகிவிட்ட நிலையில், '18 வயதிற்குக் கீழுள்ள மாணவ, மாணவியருக்கு செல்போன் தரமாட்டோம் எனப் பெற்றோர்கள் முடிவு எடுக்கவேண்டும்.

குடும்ப வட்டாரத்திலோ, நட்பு வட்டத்திலோ, செல்போன் பயன்பாட்டிற்கு தானும் அடிமையாகாமல், பிறரையும் அடிமையாகவிடாமல் பாதுகாக்கும் முயற்சி, ஒவ்வொருவராலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எந்த ஒரு பழக்கத்தையும் ஜன்னல் வழியாக உடனே தூக்கி எறிந்துவிட முடியாது. அப்படியென்றால், இதுபோன்ற பழக்கங்களில் இருந்து மீளவே முடியாதா? டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார்; 'தான் ஒரு பழக்கத்துக்கு அடிமை என்பதையும், அதனால் வரும் தீமையையும், ஒருவரை உள்ளார்ந்து உணரச் செய்துவிட்டால், அவர் தானாகவே அந்தப் பழக்கத்திலிருந்து மீண்டுவர வாய்ப்பு உண்டு' தேவைக்கு மட்டுமே செல்போனைப் பயன்படுத்துபவர்கள் வெகு சிலரே! செல்போனின் தீவிரப் பிடியிலிருந்து தங்களை மீட்க வேண்டியவர்கள் அனேகம்பேர்!

– ஆசிரியர்

# தலைநிமிரும் தமிழ்நாடு



முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்று, நூறு நாட்களில் ஆற்றிய மக்கள் நலப் பணிகள் அனைவரும் அறிந்த உண்மை. முதல்வர் அறிவித்த, நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் நலத் திட்டங்கள், மாவட்டங்களுக்கு நேரடியாக சென்று சேர இனி விரைவில் தமிழகத்தில் ஆதார் ஐடி போல் மக்கள் ஐடி என தமிழக அரசு சூப்பர் திட்டம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டின் வசிப்பவர்களுக்கு 10 முதல் 12 இலக்கங்கள் கொண்ட மக்கள் ஐடி வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தியாவில் ஆதார் எண் என்பது அனைவரும் பயன்படுத்து முக்கிய ஆவணமாக இருந்து வருகிறது. வங்கி கணக்கு, மொபைல் எண், பான் கார்டு, வாக்காளர் அட்டை, மின் இணைப்பு எண் என அனைத்திலும் ஆதார் இணைக்கப்பட்டு வருகிறது. இது அனைவரது அடையாளங்களையும் கொண்ட முக்கிய ஆவணமாக மத்திய அரசு இந்தியா முழுவதும் மக்களுக்கு வழங்கி வருகிறது. தற்போது இந்திய அளவில், பான் கார்டு மற்றும் வாக்காளர் அட்டைகளில் ஆதார் எண்ணை இணைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல், தமிழகத்தில் அரசு நலத்திட்டங்கள் உட்பட மின் இணைப்பு எண்ணுடன் இணைக்க அறிவுறுத்தப்பட்டு தற்போது அந்த பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், தற்போது தமிழக அரசு சார்பில் தமிழகத்தில் வசிக்கும் மக்களுக்கென புதிய ஐடி எண் வழங்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது 10 முதல் 12 இலக்கங்களுடன் வரும் மக்கள் ஐடி MAKKAL ID ஆக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் நோக்கம் தமிழக அரசின் சமூக நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் செயல்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப்பட உள்ளதாகவும், இதற்கான பணியை மாநில குடும்ப தரவு தளம் தமிழ்நாடு அரசின் மூலம் உருவாக்கப்பட உள்ளதாகவும் தமிழக அரசு தெரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மறைந்த கலைஞர் கருணாநிதி எப்போதும், “மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி” என்று முழங்குவார். பல மாநிலங்கள் இணைந்த கூட்டாட்சியாக மத்திய அரசாங்கம் நிர்வாகத்தை நடத்துகிறது. மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் ராணுவம், வெளி விவகாரத்துறை, ரெயில்வே, தபால் இலாகா, சுங்க வரி, வருமான வரி உள்பட 97 துறைகள் வருகின்றன. மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் சட்டம் ஒழுங்கு, மருத்துவம், விவசாயம், தொழில் உள்பட 59 துறைகள் இருக்கின்றன. மத்தியமாநில அரசுகளின் பொது நிர்வாகத்தில், அதாவது பொதுப்பட்டியலில், குற்றவியல் சட்டம், கல்வி உள்பட 52 துறைகள் உள்ளன.

‘இந்தியா டுடே’ இதழ் கடந்த 2003ம் ஆண்டு முதல், மாநிலங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்து மதிப்பீடு அளித்துவருகிறது. 20வது ஆண்டாக இந்த முறை, டெல்லியிலுள்ள ஆராய்ச்சி நிறுவனமான, மார்க்கெட்டிங் அண்டு டெவலப்மெண்ட் ரிசர்ச் அசோசியேட்ஸ் நிறுவனம், இந்த ஆய்வை பல்வேறு துறை நிபுணர்கள் தந்த அளவீடுகளின் அடிப்படையிலும், தரவுகளின் அடிப்படையிலும் மேற்கொண்டது. 35 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், குறைந்தது 50 லட்சம் மக்கள்தொகையும் கொண்ட மாநிலங்கள் பெரிய மாநிலங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. அந்த பெரிய மாநிலங்களில் பொருளாதாரம்,

உள்கட்டமைப்பு, விவசாயம், மருத்துவம், கல்வி, நிர்வாகம் அனைத்தையும் உள்ளடக்கிய மேம்பாடு, தொழில், சட்டம்ஒழுங்கு, சுற்றுலா, சுற்றுச்சூழல் மற்றும் தூய்மை ஆகிய இனங்களில் தனித்தனியாகவும், ஒட்டு மொத்தமாகவும் எந்த மாநிலம் சிறந்து விளங்குகிறது? என்று தேர்வு செய்யப்பட்டது. பெரிய மாநிலங்களில் சிறந்த செயல்பாட்டுக்கான முதல் மாநிலமாக தமிழ்நாடு தேர்வு பெற்றுள்ளது என்பது தமிழர்களுக்கும், குறிப்பாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் கிடைத்த மிகப்பெரிய பெருமையாகும்.

ஒட்டுமொத்த வளர்ச்சி, பொருளாதாரம், உள்கட்டமைப்பு, மருத்துவம், தூய்மை, சட்டம்ஒழுங்கு, சுற்றுச்சூழல், கல்வி, தொழில் ஆகிய 9 துறைகளில், முதல் 5 இடங்களில் தமிழ்நாடு இருக்கிறது. ஒட்டுமொத்த மேம்பாட்டில் தமிழகம் தன்னிகரற்று நாட்டிலேயே முதல் இடத்திலும், பொருளாதார வளர்ச்சியில் 2வது இடத்திலும் இருக்கிறது. உள்கட்டமைப்பு, மருத்துவம், தூய்மையில் 3வது இடத்திலும், சட்டம்ஒழுங்கு, சுற்றுச்சூழல், கல்வியில் 4வது இடத்திலும், தொழிலில் 5வது இடத்திலும் இருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளாகவே தமிழ்நாடு முதல் இடத்தில் இருந்தாலும், இந்த ஆண்டு தேர்வு எல்லை மிக பரந்த அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டாலும், பல முன்னேற்றங்களில் பீடுநடைபோட்டு, வெற்றி மேடையில் தங்கப்பதக்கம் பெறும் முதல் இடத்துக்கு தமிழ்நாடு வந்தது மிகப்பெரிய சவாலில் கிடைத்த வெற்றியாகும். ஆட்சிக்கு வந்தவுடனேயே, “2030ம் ஆண்டில் தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர், அதாவது ஏறத்தாழ ரூ.82 லட்சம் கோடி பொருளாதாரத்தை அடைய செய்வேன்” என்று சூளுரைத்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், அதற்காக வழிவகுக்க நோபல் பரிசு பெற்ற எஸ்தர் டப்லோ, முன்னாள் ரிசர்வ் வங்கி கவர்னர் ரகுராம் ராஜன் கொண்ட உயர்மட்ட பொருளாதார ஆலோசனை குழுவை அமைத்துள்ளார். இதுவரை தமிழ்நாட்டுக்கு ரூ.2 லட்சத்து 23 ஆயிரம் கோடி முதலீடுகளையும், 3 லட்சத்து 44 ஆயிரத்து 150 பேருக்கு வேலைவாய்ப்புகளையும் அளிக்கும் 207 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளது, முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் மிகப்பெரிய சாதனையாகும். அவரது சலியாத உழைப்புதான் இந்த சீர்மிகு பெருமைக்கு காரணமாகும். “உழைப்பு! உழைப்பு! உழைப்பு! அதன் பெயர்தான் மு.க.ஸ்டாலின்” என்று மறைந்த கலைஞர் கருணாநிதி அடிக்கடி பெருமிதத்துடன் கூறுவார். அந்த வகையில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பம்பரமாக சுழன்று பணியாற்றுகிறார். ஆட்சிக்கு வந்து 20 மாதங்களில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நேரத்திலும், கால் வலி மற்றும் முதுகு வலி காரணமாக மருத்துவர் ஆலோசனைப்படி, ஒரு சில நாட்கள் மட்டுமே ஓய்வில் இருந்தாரே தவிர, மற்ற நாட்களில் எல்லாம் தலைமை செயலகத்துக்கு வருவதிலும், ஆய்வு கூட்டங்களை நடத்துவதிலும், சுற்றுப்பயணங்கள் மேற்கொள்வதிலும் தணியாத ஆர்வத்தோடு பணியாற்றுகிறார். தலைமை செயலகத்தில் அவரது இருக்கைக்கு முன்னால் வைக்கப் பட்டுள்ள மின்னணு தகவல் பலகை மூலம் அனைத்து திட்டங்களின் செயல்பாடுகளையும் தினமும் பார்த்து வருகிறார். தனக்கு கிடைத்த எந்த வாய்ப்பையும், மக்களுக்கான அறிவிப்பு களாக வெளியிட அவர் தவறுவதில்லை.

கவர்னரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தின் மீது பதில் அளித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார். முதல்அமைச்சர் இந்த விவாதத்தில் தனது கண்ணியத்தை காட்டினார். கவர்னருக்கும், அரசுக்கும் இடையே பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது உரையின் தொடக்கத்தில் கவர்னர் ஆற்றிய உரையில் அரசை பாராட்டிய வாசகங்களை குறிப்பிட்டுவிட்டு, பின்பு ஆண்டின் முதல் கூட்டத்தொடரில் இம்மாமன்றத்துக்கு வருகை தந்து உரையாற்றிய கவர்னருக்கு இந்த அரசின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்று பேசியது, பேரறிஞர் அண்ணா சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதை எப்படி பின்பற்றுகிறார் என்று விளக்கும் வகையில் அமைந்திருந்தது.

கடந்த 20 மாதங்களில் அவரது செயல்பாடு, ஆட்சியின் சாதனை மற்றும் அறிவிப்புகளையும் மிக விரிவாக வெளியிட்டார். அரசின் சார்பில், இதுவரை 3,346 அறிவிப்புகள் வெளியிடப்பட் டுள்ளன. அதில் 86 சதவீத அறிவிப்புகள் செயல் பாட்டுக்கு வந்துள்ளன. கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 9 ஆயிரம் கிலோமீட்டர் பயணம் செய்து, 551 நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். அப்போது ஒரு கோடியே 3 லட்சத்துக்கு அதிகமானவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. 28 மாவட்டங்களில் நடந்த நலத்திட்ட விழாக்களில், நான் திறந்து வைத்த முடிவுற்ற பணிகள் 7 ஆயிரத்து 430. இதன் மொத்த மதிப்பு ரூ.3 ஆயிரத்து 50 கோடியாகும். ரூ.4 ஆயிரத்து 744 கோடி மதிப்புள்ள 13 ஆயிரத்து 428 பணிகள் அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டுள்ளன என்பது உள்பட, தான் ஆற்றிய பணிப் பட்டியலை கூறினார். தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சியை இன்னும் மேலெடுத்து செல்லும் அறிவிப்பை வெளியிட்டுவிட்டு, இந்த 2023–24ம் ஆண்டில் படிப்படியாக அனைத்து அரசு பள்ளிக்கூடங்களிலும் 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்படும் என்ற பசிப்பிணி போக்கும் திட்டம் அறிவித்து செயல் வடிவம் பெற்றுள்ளது. முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் புயல் வேக பணி புரட்சியாளர் மாவோவின் கூற்றான, ‘மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை’ என்பதைப்போலவும், ‘கடிகாரம் ஓடும் முன் ஓடு’ என்ற பாவேந்தர் பாரதிதாசன் கருத்துக்கு ஏற்பவும் இருக்கிறது என்பதுதான் பொதுவான கருத்தாக சொல்லபடுகிறது.





# உழைப்பாளிகளை உயர்ந்த இடத்தில் வைத்து உதவும் குணம் கொண்ட

# சமூக சேவகர்

– N.கலைமணி

திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் அடுத்துள்ள குறிச்சி என்ற ஒரு சிறிய கிராமத்தில் ஷி.நாகராஜன் N.பிச்சம்மாள் தம்பதிகளுக்கு மகனாக, சமூக சேவகர் நல் உள்ளம் படைத்த N.கலைமணி அவர்கள் 22ல் ஏப்ரல் மாதம் 1983 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பிறக்கும் பொழுது குடும்பத்தில் எந்தவித வசதியும் இல்லாமல் பெற்றோர்களின் கஷ்டங்கள் அனைத்தும் தெரிந்து திருநெல்வேலி மேலப்பாளையத்தில் உள்ள பள்ளியில் 10ஆம் வகுப்பு வரை கல்வி கற்றார். வாழ்க்கையில் பெரிய நிலைக்கு வர வேண்டும் என மனதிற்குள் கனவாக ஓடிக் கொண்டிருந்தன. பெற்றோர்களின் கடும் முயற்சியாலும் கனவுகளோடும் அவர் பிறந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து இருந்து 2007 ஆம் ஆண்டு சென்னையில் உள்ள ஒரு ஜவுளி கடையில் உதவியாளராக பணிபுரிந்து வந்தார்.

மேலும் வாழ்க்கையில் வளர்ச்சி அடைய மறைந்த முன்னாள் இந்திய குடியரசு தலைவர் டாக்டர்.APJ அப்துல் கலாம் அவர்கள் சொன்னது போல் இளைஞர்களே கனவு காணுங்கள் அவருடைய அந்த வழியை பின்பற்றி தற்போது N.கலைமணி அவர்கள் BA பட்டப்படிப்பு முடித்து திருமுடிவாக்கம் ஸ்ரீ சாந்தி ஆனந்த வித்யாலயா சிபிஎஸ்இ பள்ளி நிர்வாகத்தில் பள்ளி கல்வித்துறை அறங்காவலராகவும் OMKAR CAR CARE GROUP OF COMPANY- யையும் தொடங்கி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளார்.

கொரோனா காலகட்டத்தில் மக்களுக்காக இவர் அர்ப்பணித்த சேவை! சமூக சேவகர் N.கலைமணி அவர்கள் சிறுக சிறுக சேமித்து வைத்த பணத்தில் தனக்காக ஒரு கார் வாங்க வேண்டும் என ஆசைப்பட்டு சென்னையில் உள்ள ஈக்காடுதாங்கல் KIA ஷோரூமில் முன் பணமாக ரூபாய் 25 ஆயிரம் கொடுத்து வைத்திருந்தார். கடந்த 2020 ஆம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் ஊரடங்கு நேரத்தில் பசியால் சாலை ஓரத்தில் வசிக்கும் மக்களுக்காகவும் அந்த நேரத்தில் இரவு பகல் பாராமல் அனைவருக்கும் அவருடைய சொந்த செலவில் மூன்று வேளையும் உணவுகளை வழங்கி காவல்துறை அதிகாரிகள் மத்தியில் நற்பெயரை பெற்றார். அதனை தொடர்ந்து கார் வாங்குவதற்காக சேர்த்து வைத்திருந்த பணம் அனைத்தையும் ஏழை எளிய மக்கள் சாலையோர மக்களின் பசிக்கு உணவளித்து அதில் மகிழ்ச்சி அடைந்தார். தற்போது திருமுடிவாக்கம் ஸ்ரீ சாந்தி ஆனந்த வித்யாலயா பள்ளியின் அறங்காவலராக உள்ள N.கலைமணி அவர்களின் வாழ்க்கையின் ஒரே குறிக்கோள் வாழ்க்கையில் ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம்! அதுபோல் உழைப்பாளியின் சிரிப்பில் இறைவனை உணரலாம் என்ற அடிப்படையில் சந்தோசத்தை அடைந்தார்.

அதேபோல் உழைப்பாளி உழைத்த உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும் பொழுது உழைப்பாளியின் முகத்தில் ஒரு சந்தோஷத்தை காணமுடிகிறது. உழைப்பாளியை அனைவரின் முன்னிலையிலும் கௌரவிக்கும் பொழுது ஏதோ சாதித்து விட்டோம் என எண்ணி இந்நிகழ்வை பெரிய விஷயமாகவும் மகிழ்ச்சியாகவும் செய்து வருவதாக தெரிவித்தார். ஒவ்வொரு மேடையிலும் தன்னை கௌரவிப்பது போல் தன்னை சார்ந்தவர்களும் இதுபோல் கௌரவிக்கப்பட வேண்டும் என்று மனதுக்குள் ஒரு எண்ணம் தோன்றும் என்றும், உழைப்பாளியின் உயர்வுக்கு உதவி செய்து மேலே வரும் பொழுது அந்த உழைப்பாளி மேலும் ஒருவரை சமுதாயத்தில் உருவாக்கும் பொழுது அதில் வரும் சந்தோஷம் நிகரானது வேறு எதுவும் இல்லை என்றும், இவ்வுலகில் இருக்கும் கடைசி மூச்சு உள்ள வரையில் கடின உழைப்பாளிகளை நல்ல நிலைக்கு உயர்த்தி விடுவேன் என்றும், அவர்களின் சிரிப்பில் நான் சந்தோசம் அடைவேன் என்றும் மகிழ்ச்சியாக தெரிவித்தார்.

இதனிடையில் மேலும் சமூக சேவகர் N.கலைமணி BA அவர்கள் ஸ்ரீ சாந்தி ஆனந்த வித்யாலயா பள்ளியில் அறங்காவலராக பள்ளி மாணவ மாணவிகளுக்கு சிறந்த ஆசிரியர்கள் மூலம் கல்வி கற்பிப்பதுடன், அவர்களுக்கு நல் ஒழுக்கத்துடன் எதிர்காலத்தில் சமுதாயத்தில் மக்களுக்காக சேவை செய்ய ஒரு டாக்டராகவோ, வழக்கறிஞராகவோ, அரசுத்துறை அதிகாரிகளாக வரும்பொழுது 100% மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெறுவார்கள் என்றும், இவ்வுலகில் இருக்கும் வரை என்னுடைய சமூக சேவை மற்றும் ஏழை உழைப்பாளிகளை மென்மேலும் உயர்ந்திட முடிந்த அளவுக்கு உதவுவேன் என்றும், மேலும் B.A.B.L படிப்பு தொடர போவதாகவும் தெரிவித்தார்.

# 2022-ம் ஆண்டின் தமிழக காவல் துறையின் சாதனைகள்

தமிழக காவல்துறை வரலாற்றில் 2022ம் ஆண்டு சவால் நிறைந்ததாகவும், வெற்றிகரமாகவும் இருந்தது. நடப்பு ஆண்டை நிறைவு செய்து, புதிய ஆண்டில் பயனிக்கும் இத்தருணத்தில், நாம் அடைந்த வெற்றித் தருணங்களை திரும்பி பார்க்கலாம்.

கடந்த ஆண்டு சாதி அல்லது வகுப்புவாத மோதல், காவல் துறை துப்பாக்கி சூடு, கள்ளச் சாராய சாவு அல்லது பெரிய குற்றச் சம்பவங்கள் நிகழாமல் பாது காக்கப்பட்டது. ஜல்லிக்கட்டு, தேவர் குரு பூஜை, இம்மானுவேல் சேகரன் நினைவு நாள், மதுரை சித்திரை திருவிழா, விநாயக சதுர்த்தி திரு வண்ணாமலை கார்த்திகை தீபம் திருவிழா ஆகியவை அமைதியாக நடந்தது.

2022ம் ஆண்டு ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 9ம் தேதி வரை மகாபலிபுரத்தில் நடந்த 44வது சர்வதேச செஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்குபெற்ற போட்டியாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் என சுமார் 2 ஆயிரம் வெளிநாட்ட வர்களுக்கு சிறப்பான பாதுகாப்பை காவல்துறை உறுதி செய்தது. ‘ஆபரேஷன் ரவுடி வேட்டை’யில் 3,949 நபர்கள் குண்டர்கள் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப் பட்டது தான், நாட்டிலேயே அதிகபட்ச மாகும். ‘ஆபரேஷன் கஞ் சா வேட்டை’ நடத்தப் பட்டதன் காரணமாக தமிழகம் முழுவதும் 9,906 வழக்குகள் பதிவு செய்யப் பட்டு, அதில் தொடர்புடைய 13,491 கஞ்சா வியாபாரிகள் கைது செய்யப் பட்டனர். அவர்களிடம் இருந்து 24 டன் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு, 4,141 வங்கி கணக்குகள் முடக்கப்பட்டன. முக்கிய நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

போதை பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு ஆகியவை இணைக்கப்பட்டு, அமலாக் கப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை என்ற பிரிவு உருவாக்கப் பட்டதன் மூலம் போதை பொருள் மற்றும் பிற பொருட்களுக்கு எதிராக நடந்து வரும் நடவடிக்கைகளுக்கு உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது. போதை பொருள் வேண்டாம் என்ற கருத்து தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்றடைந் துள்ளது.

ஆவடி மற்றும் தாம்பரத்தில் புதிய காவல் ஆணை யரகங்கள் அமைக்கப்பட்டதன் மூலம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நாட்டிலேயே ‘பாதுகாப்பான நகரம்’ என்று ஏற்கனவே அறிவிக்கப் பட்ட தலைநகர் சென்னை மாநகரின் பாதுகாப்பை மேம்படுத்தி உள்ளது. முதல்வர் காவல்துறை தலைமையகத்திற்கு கடந்த 22.9.2022 அன்று நேரில் வருகை தந்து காவலர்களிடமிருந்து மனுக்களை பெற்றார்கள். இதன்படி 1,500 காவலர்களின் குறைகள் ‘உங்கள் துறையில் முதல்வர்’ திட்டத்தின் கீழ் தீர்க்கப் பட்டுள்ளன. காவலர் களுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுமுறை என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உத்தரவு வழங்கப்பட்டது. பணியின் போது உயிரிழந்த 1,132 காவலர் களின் வாரிசுதாரர் களுக்கு கருணை அடிப்படையில் தகவல் பதிவு உதவியாளர் மற்றும் காவல் நிலைய வரவேற்பாளர் பணிகள் வழங்கப்பட்டன. சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் முதன்மை மாநிலம் 2022 என்ற விருது தமிழகத்திற்கு வழங்கப் பட்டுள்ளது. சென்னையில் கடந்த 31.7.2022 அன்று நடைபெற்ற விழாவில் இந்திய துணை ஜனாதிபதி தமிழக காவல் துறைக்கு பெருமை மிக்க குடியரசுத் தலைவரின் வண்ணக் கொடியை வழங்கினார் காவல் பணியில் உள்ள பொது பணி நிலைமைகள், காவலர் குடியிருப்பு, காவலர் நலன்கள் உள்ளிட்டவை குறித்து ஆராய நான்காவது காவல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# ஜின்னாவின்....


## சமூக சேவைகள் மற்றும் சிறப்பான பணிகள்

ஐஸ்ஹவுஸ் பகுதியை சேர்ந்தவர் எஸ்.என். முகமது அலி ஜின்னா தனியார் வங்கியில் மேலாளராக பணிபுரிகிறார். இவர் சமூக பணியை காவலர் "நண்பர்கள் குழு" 2000-ம் ஆண்டில் ஐஸ்ஹவுஸ் காவல் நிலையத்தில் தொடங்கினார். அதன்பிறகு 2004ம் ஆண்டு ஐஸ்அவுஸ் காவலர் சிறார் மன்ற ஒருங்கிணைப்பாளராக பணியாற்றினர். சாலையோரம் வசிக்கும் சிறார்களுக்கான விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல், 2004ம் ஆண்டு சுனாமியின் போது பட்டினப்பாக்கம், சீனிவாசபுரத்தில் கடலில் ஒதுங்கிய 13 பிணங்களை மீட்டு, கடும் மக்கள் கூட்டத்திற்கிடைய அப்போதைய மயிலாப்பூர் காவல் துணை ஆணையர் கே.பி.சண்முக ராஜேஸ்வரன் அவர்களுடன் ஒருங்கிணைந்து அரசு இராயப்பேட்டை மருத்துவமனையின் பிணவறையில் கொண்டு சேர்த்தது, அப்போதைய செய்தித்தாள்களில் செய்தி வெளியானது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் 30டிசம்பர் 21ம் ஆண்டு சென்னையில் கடும் மழையால் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலில் சிக்கி தவித்த 3 ஆம்புலன்ஸ்களை 4கிமீ. மழையில் நனைந்து நடந்து சென்று போக்குவரத்தை சரி செய்து அரசு ராஜிவ் காந்தி பொது மருத்துவமனையில் கொண்டு சேர்த்தது இந்தியா முழுவதும் வைரலாக பரவியது. அவரை நடிகர் கமல்ஹாசன் பாராட்டி டிவிட்டரில் வாழ்த்து தெரிவித்தார்.

அது மட்டும் இன்றி பல உயர் அதிகாரிகள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் பலரின் பாராட்டை பெற்றார். மேலும் இவர் தினமும் இரவு 10மணி முதல் நள்ளிரவு 1மணிவரை அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் வரும் நோயாளிகளுக்கு உதவி செய்வது, விபத்தில் சிக்கி காயமடைந்து வருவபவரின் உறவினரின் வீட்டு அடையாள காணும் பணி மற்றும் மருத்துவமனைக்கு வந்து எதிர்பாராமல் இறந்து போனவர்களின் உறவினர்களுக்கு உதவி செய்வது போன்ற பணிகளை கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக செய்து வருகிறார். கொரொனா தொற்றால் இறந்தவர்களின் உடலை நவீன தொழில்நுட்ப உதவியுடன் அவர்கள் மதவழக்கப்படி இறுதிச்சடங்கு செய்தது, இந்நாள் வரை எந்த அரசியல் மற்றும் இயக்கங்களில் சாயம் படாமல் நடுநிலையாக பயணித்து கொண்டு இருப்பது இவருடைய தனித்தன்மை.

மேலும் யாரிடமும் எந்த வகையிலும் நன்கொடை வசூலிக்காமல் அதற்கு மாற்றாக அவர்கள் வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிக்கு தேவையான உணவுகளை சமைத்து தருவது, பரிமாறுவது என அதில் வரும் வருமானத்தை கொண்டு உறவினர்கள் இல்லாமல் இருக்கும் பிணங்களை மனிதநேயத்தோடு மண்ணில் வி(பு)தைப்போம் என்ற பணிக்களை செய்து வந்தார். மருத்துவ சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு



வருபவரின் எக்ஸ்ரே, ஸ்கேன் மற்றும் உணவு தேவைக்கான செலவு செய்துவருவது சிறப்பம்சம்.

மேலும் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் இரவு நேரத்தில் சிகிச்சை வருவோருக்கு மிகவும் பணிவுடன், அக்கறையுடனும் அவர்களுக்கான சிகிச்சை உதவிகளை இவர் பெற்று தருகிறார். தினமும் இவர் தன்னலம் பாராமல் இவரின் பணியை முடித்துக் கொண்டு மருத்துவ உதவிகளையும், இதர உதவிகளையும் பிரதிபலனம் எதிர்பார்க்காமல் செய்வது பாராட்டுக்குரியது.

# சமூகப் பணிக்கான மக்கள் சேவகர்

அசோக் நகர் பகுதியை சார்ந்தவர் முகமது யூசுப். இவர் தி.நகர் பகுதியில் கடை ஒன்றை நடத்தி வருகிறார். சமூகப் பணியில் கடந்த 2008 முதல் ஈடுபட்டு வரும் இவர் தமுமுக அமைப்பில் உறுப்பினராக சேர்ந்து கிளைச் செயலாளராக பணியை துவங்கினார். தற்போது தி.நகர் பகுதி செயலாளராக பொறுப்பு வகிக்கிறார். இவர் பல வருடங்களாக சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். அதில் மருத்துவ உதவிகள், திருமண உதவிகள், கல்வி உதவிகள், என பல சமூகப் பணிகளை தன்னால் முடிந்த அளவு செய்து வந்துள்ளார். மேலும் 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட சென்னை மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னால் முடிந்த அளவு தனக்குத் தெரிந்த நபர்கள் மூலம்



உதவிகள் பெற்று ரூபாய் 7 லட்சம் வரையிலான நிவாரண பொருட்களை அந்த பகுதியில் உள்ள மக்களுக்கு வழங்கியுள்ளார்.

மேலும் கொரோனா காலகட்டத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ரூபாய் 5000/ மதிப்புள்ள இரண்டு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்களை 200 குடும்பங்களுக்கு மேல் வழங்கியுள்ளார். மேலும் சாலையோர மக்களுக்கு தினமும் 300 நபர்களுக்கு உணவு பொட்டலங்களை தொடர்ந்து 35 நாட்களுக்கு மேல் வழங்கியது பாராட்டுக்குறியது. இது மட்டுமல்லாமல் அறுவை சிகிச்சை உதவிகள், மருத்துவ உதவிகள் என இவரின் சமூகப் பணிகள் செய்து வருவது குறித்து ஏழை எளியோர் மக்கள் மத்தியில் மக்கள் சேவகன் என்று இடம் பெற்றுள்ளார்.

# பத்திரிகையாளரின் சாதனை



பல்லாவரம், பொழிச்சலூர் பகுதியை சேர்ந்தவர் S.முஹம்மது ரவூப் இவரின் தொழில் வீட்டின் மின் சாதனங்களை பழுது பார்க்கும் பணி செய்து வருகிறார். மேலும் இவர் நமது தேடல் நாளிதழில் செய்தி யாளராகவும் இருந்து வருகிறார். இவர் வசிக்கும் பகுதியில் ஏற்படும் சமூகப் பிரச்சினைகள் தெரு விளக்கு எரியாமல் இருப்பது, மின்சாரதடை, தெருவில் சாக்கடை, கழிவு நீர் அடைப்பு போன்ற பல பிரச்சினைகளை முன்னெடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு உடனுக்குடன் சரி செய்யும் பணியில் ஈடுபடுகிறார்.


மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு முடிக்கும் அனைத்து வேலைகளையும் உடனுக்குடன் நாளிதழில் பதிவு செய்து பாராட்டுக்களையும் தெரிவிக்கிறார். கொரோனா ஊரடங்கு காலகட்டத்தில் அத்தியாவசிய மின்றி வெளியே சென்ற மக்களை அறிவுரை கூறி வெளியே வரவிடாமல் தன்னுடைய பணிகளை சரியாக செய்து வந்த தமிழக காவல்துறை பணிகளை நேரில் புகைப்படம் பிடித்து அதை நாளிதழில் பதிவு செய்தது குறிப்பிடத்தக்கது.

கொரோனா ஊரடங்கு சமயத்தில் பொதுமக்களுக்கு தேவைப்பட்ட அனைத்து உதவிகளையும் தன்னர்வலராக முன் நின்று செய்து வந்தார். மேலும் இவரை தொடர்பு கொண்டு கோரிக்கை வைக்கும் அனைத்து பிரச்சனைகளும் எந்த பகுதியாக இருந்தாலும், நேரில் சென்று முன்னின்று முடித்து தருவதால் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளார். இவரின் முன் களப்பணி மிகவும் பாராட்டுக்குரியது.



# பொறுப்பான அரசியலை வழிநடத்தும் தலைவர்

நவம்பர் 4, 1956 திருச்சி மாநகரின் நவாப் பள்ளிவாசல் அருகிலுள்ள சவுக் மைதானம். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் சிறப்புரை ஆற்றிய இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாடு. இந்த மேடையில் அறிமுகமானவர்தான் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன். ஜனவரி 5, 1940 ல் பிறந்த அவருக்கு அப்போது வயது 16. புதுக்கோட்டை மாவட்டத்தின் திருநள்ளூரில் பிறந்து பின்னர் திருச்சியில் குடியேறி அங்குள்ள ஸ்ரீராம் நடுநிலைப் பள்ளியில் ஆரம்பக் கல்வி, புனித ஜோசப் உயர்நிலைப் பள்ளியில் உயர்நிலை கல்வி, பின்னர் ஜமால் முகமது கல்லூரியில் புதுமுக வகுப்பு, புனித சூசையப்பர் கல்லூரியில் இளங்கலை படிப்பு, சென்னை சட்டக் கல்லூரியில் பிஎல் பட்டப்படிப்பு, மாநிலக் கல்லூரியில் முதுகலை படிப்பு, சென்னை பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவர் என இவரது கற்றல் அறிவு விரிவடைந்து இருந்தது.



1965இல் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் வரலாற்று துறை விரிவுரையாளர், பின்னர் பேராசிரியர், தொடர்ந்து துறை தலைவர் என 1980 வரை கல்விப் பணி தொடர்ந்தது. படிக்கும் காலம் தொட்டு பத்திரிகைகளில் ஈடுபாடு உடைய பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் மறுமலர்ச்சியில் எழுதத் தொடங்கி, “முபாரக்“ தாருல் குர்ஆன் எனத் தொடர்ந்து, 1996 இல் மணிச்சுடர் நாளேட்டின் நிர்வாக ஆசிரியர், கடந்த கால் நூற்றாண்டு காலமாக அதன் ஆசிரியர் என முத்திரை பதித்தவர். “ இஸ்லாம் தமிழருக்கு வந்த மதமா? சொந்த மதமா?” என்ற அவரது ஆராய்ச்சி கட்டுரையும் 2010 ஜூன் 23  27 இல் கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட “செம்மொழித் தமிழும் அரபியும் ஒப்பாய்வு” என்ற அவரது ஆய்வு கட்டுரையும் வரலாற்று ஆவணங்களாக பிரமிக்க வைக்கின்றன.

1980 மே மாதம் நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளராக திருச்சி 2 தொகுதியில் களம் கண்டு, வெற்றி வாய்ப்பு இழந்த நிலையில் இயக்கம் வளர்க்க வீறு கொண்டு எழுந்த நிலையில், 2004 மே மாதம் நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவை தொகுதியில் போட்டியிட்டு மகத்தான வெற்றியடைந்தார். முஸ்லிம் மாணவர் பேரவை அமைப்பாளர், இளைஞர் அணி பொறுப்பாளர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கல்வி கலாச்சார பிரிவு செயலாளர், மாநில அமைப்பு செயலாளர், மாநில பொதுச் செயலாளர் என 1980 முதல் பணி செய்த பேராசிரியர், சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துல் சமது சாகிப் மறைவை தொடர்ந்து 1999 மே 19 அன்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாடு மாநில தலைவராக தேர்வு செய்யப்பட்டார். சென்னை மண்ணடி மரைக்கார் லெப்பை தெருவில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைமையகமான காயிதே மில்லத் மன்ஜிலை கண்கவர் மாளிகையாக கட்டி எழுப்பி 2004 மார்ச் 14இல் திறப்பு விழா காணச் செய்தார். முஜாஹிதே மில்லத் குலாம் மஹ்மூது பனாத்வாலா சாஹிப் மறைவை தொடர்ந்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவராக இ. அகமது சாஹிபும், தேசிய பொதுச்செயலாளராக பேராசிரியர் கே .எம். காதர் மொகிதீன் அவர்களும் 2008 செப்டம்பர் 14 அன்று தேர்வு செய்யப்பட்டனர்.

தேசிய பொறுப்பை தான் ஏற்பதாக இருந்தால் இந்தியா முழுவதும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஒரே பெயரில் செயல்பட வேண்டும் என அவர் காட்டிய உறுதி கேரளா உள்ளிட்ட மாநிலங்களின் முஸ்லிம் லீகர்களின், மாபெரும் ஒத்துழைப்பை பெற்று தேசம் முழுவதும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஒரே பெயரில் ஒரே அமைப்பானது. மார்ச் 3, 2012 அன்று இந்திய தேர்தல் ஆணையம் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கை அங்கீகரித்து, தேர்தல் சின்னமாக ஏணி சின்னத்தை ஒதுக்கியது. இந்திய நாடாளுமன்றம் ஜூன் 27, 2012 இல் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அங்கீகார அறிவிப்பை வெளியிட்டது. இ. அகமது சாஹிப், மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சராகவும், பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த காலகட்டத்தில் தான் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் குறைந்தபட்ச செயல் திட்டத்திற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் செய்த பரிந்துரையால் சச்சார் கமிஷன், மிஸ்ரா ஆணையம், ஆசாத் பவுண்டேசனுக்கு நிதி அதிகரிப்பு என்பனவெல்லாம் கிடைத்தன.

தலைநகர் டெல்லியில் 2008இல் குண்டுவெடிப்புகள் நடந்து பலர் பலியாகினர். வழக்கம் போல் இதற்கும் முஸ்லிம்களே காரணம் எனக்கூறி நடவடிக்கையில் இறங்கிய காவல்துறை ஜாமியா மில்லியா இஸ்லாமிய

பல்கலைக்கழக மாணவர்கள் இருவரை என்கவுண்டர் செய்தது. பதறிப்போன அதன் துணை வேந்தர் டாக்டர் முசீருல்ஹசன், பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் எம்பி அவர்களின் டெல்லி இல்லத்திற்கு விரைந்து வருகிறார். விவரங்களை கேட்டறிந்த பேராசிரியர், துணைவேந்தரை அழைத்துக் கொண்டு இ. அகமது சாகிபை சந்திக்கிறார்.இ. அகமது சாஹிப் அன்றைய உள்துறை அதிகாரி ஜெய்ஸ்வாலையும் உடன் அழைத்துக் கொண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியா காந்தியை சந்தித்து முறையிடுகின்றனர். பின்னர் சோனியா ஆலோசனையின் பேரில் அன்றைய பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கின்றனர்.

இதன் பிறகு தான் குண்டுவெடிப்பு சம்பவங்களை கண்டறிய மகாராஷ்டிர தீவிரவாத தடுப்பு படை தலைவர் ஹேமந்த் கர்கரே தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டு தீவிர விசாரணை நடத்தப்பட்டது. மாலேகான், ஹைதராபாத் மக்கா மஸ்ஜித், அஜ்மீர் தர்கா, சம்ஜோதா உள்ளிட்ட குண்டுவெடிப்பு சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வந்தன. இந்துத்துவாவின் பெண் துறவி பிரக்யாஷிங் தாகூர், ராணுவ அதிகாரிகள் ஸ்ரீகாந்த் பிரசாத், ரோஹித், தயானந்த பாண்டே, சுவாமி அசிமானந்தா எனப் பலர் கைதாகின்றனர். நாடே அதிர்ச்சி அடைகிறது.

ஆகஸ்ட் 25, 2010 அன்று டெல்லியில் நடைபெற்ற காவல்துறை, உள்துறை உயர் அதிகாரிகள் மாநாட்டில் அன்றைய ஒன்றிய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், இன்று இந்தியாவுக்கு பேராபத்து காவி தீவிரவாதம் தான் என பிரகடனப்படுத்தினார். ஆக காவி தீவிரவாதத்தை அடையாளம் காண அடித்தளம் அமைத்தவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்கள் தான்.

இந்திய முஸ்லிம்களுக்கு அரசியல் முகவரியை தந்தவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் என்றால், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுத் தந்தவர் இ.அகமது சாஹிப். அந்த அகமது சாஹிப் மறைவை தொடர்ந்து பிப்ரவரி 26, 2017 முதல் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவராக பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்படுகிறார்.


சென்னை மெரினா கடற்கரை சீரணி அரங்கில் 1999 மார்ச் 10 இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பொன்விழா மாநாடு, 2008 ஜூன் 21 சென்னை தீவுத்திடலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மணிவிழா மாநாடு என மாநாடு கண்ட தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் மார்ச் 10, 2023ல் சென்னை கொட்டிவாக்கம் பழைய மகாபலிபுரம் சாலை, ஒய்எம்சிஏ மைதானத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பவள விழா அகில இந்திய மாநாட்டை நடத்துகிறார்.

75 ஆண்டுகால பொறுப்பான அரசியலுக்கு வலிமை சேர்த்திட வாருங்கள் என அழைப்பு விடுத்துள்ளார். அந்த மகத்தான தலைவர் முனீருல் மில்லத் பேராசிர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்கள் தலைமையில் நூற்றாண்டு விழா மாநாட்டையும் காணவல்ல இறைவனிடம் பிரார்த்திப்போம். இந்திய யூனியன் முஸ்லிம் லீகிற்கு வலிமை சேர்ப்போம்.

**காயல் மகபூப்**
மாநில கொள்கை பரப்புச் செயலாளர்
இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

# மின் இணைப்புடன் ஆதார் எண் இணைப்பு

ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு', 'ஒரே நாடு ஒரே நுழைவு தேர்வு' என்ற வரிசையில் உள்ள 'ஒரே நாடு ஒரே அடையாள அட்டை' என்று கூறப்படும் ஆதார் அட்டையின் அவசியம் இப்போது எல்லா சேவைகளுக்கும் மிக முக்கியமாகிவிட்டது. ஆதார் இல்லாமல் எந்த சேவையையும் பெற முடியாது என்றநிலை உருவாகி விட்டது. இப்படி 'ஆதார்' இல்லையென்றால் எதுவும் இல்லை என்ற நிலையில், சமீபத்தில் ஒருநாள் திடீரென்று மின்சார வாரியம் அனைத்து வீடு, கைத்தறி, விசைத்தறி, குடிசை, விவசாய இணைப்பு தாரர்கள் என அனைவரின் சொல்போன்களுக்கும் குறுஞ்செய்தி அனுப்பியது. 'உடனடியாக உங்கள் மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்க வேண்டும்' என்று அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. வணிக ரீதியான மின் இணைப்பு வைத்திருப்பவர்கள் இவ்வாறு இணைக்க தேவையில்லை. சமீபத்தில் மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் ரூ.2 ஆயிரத்துக்கு மேல் மின் கட்டணம் கட்ட வேண்டியவர்கள் எல்லாம் மின்வாரிய அலுவலகங்களில் கட்ட முடியாது. 'ஆன்லைன்' மூலம்தான் கட்டவேண்டும் என்று கூறப்பட்டது. 2 மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டணம் செலுத்த வேண்டிய நிலையிலும், மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ள நிலையிலும் ஏராள மானவர்களுக்கு, குறிப்பாக கூட்டு குடும்பத்தினருக்கு அதிக கட்டணம் வந்துவிடுகிறது.




உடனடி ஆதார் இணைப்புக்காக பொதுமக்களிடையே எழுந்த பலத்த எதிர்ப்பு காரணமாக இந்த இணைப்பு பணிக்காக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து 2,811 பிரிவு அலுவலகங்களிலும் இந்த மாதம் 31ந்தேதி வரை சிறப்பு முகாம்கள் செயல்படுகின்றன. அதுவரை ஆதார் எண்ணை இணைக்காமல் மின்சார கட்டணம் செலுத்தலாம் என்று அமைச்சர் செந்தில்பாலாஜி அறிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கது என்றாலும், இப்படி திடீரென்று மின் இணைப்பு எண்ணை ஆதாரோடு இணைக்க சொல்வதற்கு என்ன காரணம்?. இப்போது இல்லை என்றாலும் எதிர்காலத்தில் தற்போது வழங்கப்பட்டு வரும் 100 யூனிட் இலவச மின்சாரமும், குடிசை மற்றும் விவசாய இணைப்புகளுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரமும் வழங்குவதில் மாற்றம் வந்துவிடுமோ? என்ற அச்சமும் பொதுமக்களுக்கு இருக்கிறது.

# தமிழக டிஜிபி அதிரடி ஆக்சன்!

தமிழக டிஜிபி சைலேந்திர பாபு வெளியிட்ட அறிக்கை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. மத்திய அரசு மோட்டார் வாகன சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. அந்த சட்ட திருத்தத்தின்படி வாகன விதி மீறல் தொடர்பான அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டது. மேலும் இதற்கான அரசாணை சமீபத்தில் வெளியானது. சென்னை நகர காவல்துறை ஆணையர் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதன் படி கடந்த அக்டோபர் 28 ஆம் தேதி புதிய வாகன அபராதத் தொகை வசூல் செய்யப்படும் என தெரிவித்தனர். இந்நிலையில் சாலை விதிகளை மீறும் வாகன ஓட்டிகளிடம் அபராதம் வசூல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. போதையில் வாகனம் ஓட்டுபவரிடம் அபராதம் வசூல் செய்வதுடன் அவருடைய பின்னால் அமர்ந்திருப்பவருக்கும் அபராதம் விதிக்கப்படும் என அறிவித்தனர். அதனையடுத்து திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின்படி அபராதம் தொகை பல மடங்கு உயர்ந்தது. அந்தவகையில் ஹெல்மெட், சீட்பெல்ட் அணியாமல் வாகனங்களை இயக்கினால் குறைந்தபட்சம் 1000 ரூபாயில் இருந்து 10,000 ஆயிரம் வரை அபராதம் வசூல் செய்யப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழக டிஜிபி சைலேந்திர பாபு புதிய உத்தரவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த உத்தரவில் தமிழகத்தில் இரு சக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பின் இருக்கையில் அமர்ந்து செல்வோரும் ஹெல்மெட் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நடைமுறை அமலுக்கு வந்த பிறகு 90 சதவீதம் பேர் ஹெல்மெட் அணிந்து செல்கின்றனர் என்பது வரவேற்க தக்க விஷயமாக இருந்தாலும் மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய காவல்துறையினர் பெரும்பாலும் ஹெல்மெட் அணிவதில்லை.


அதனால் ஹெல்மெட் அணியாமல் பணிக்கு வரும் காவல்துறையினரின் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும். ஹெல்மெட் வாங்கி வந்து காண்பித்த பிறகு தான் வாகனங்கள் ஒப்படைக்கப்படும் என தெரிவித்துள்ளார். வாகன சோதனையில் ஈடுபடும் போக்குவரத்து மற்றும் சட்ட ஒழுங்கு போலீசாருக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஹெல்மெட் அணியாமல் இரு சக்கர வாகனத்தில் செல்லும் போலீசார் மீது வழக்கு பதிவு செய்து துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் போலீசார் கவன குறைவாக இருக்க வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் சிலர் கூறியதாவது: போலீஸ் டிஜிபி சைலேந்திர பாபு பிறப்பித்து இருக்கும் இந்த உத்தரவு மிகவும் வரவேற்கக்கத்தக்க ...ன்றாகவே பார்க்கிறோம். சட்டம் ...அனைவருக்கும் சமம் என்பதை தமிழக டிஜிபி நிறைவேற்றி இருக்கும் உத்தரவு, காவல் துறையினருக்கு அதிர்ச்சியை தரும் என்பது மட்டும் உண்மை. பிறரை சட்டத்தை மதிக்க சொல்லும் போலீசாரே பல இடங்களில் போக்குவரத்து விதிகளை மதிப்பது இல்லை என்ற குற்றச்சாட்டு உள்ளதால் அதை முறியடிக்கும் விதமாக, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது என்றே கருதுகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

மேலும் தமிழகத்தில், போதை





பொருளை முற்றிலும் தடுத்து, கஞ்சா பயிரை ஒழிக்க, ஆந்திர போலீசாருடன், விஷேச கூட்டு நடவடிக்கை மற்றும் தமிழகத்தில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என டிஜிபி சைலேந்திர பாபு உத்தரவிட்டார்.

தமிழகத்தில் நடக்கும் குற்றச்செயல்களுக்கு அடிப்படையாக கஞ்சா, போதைப்பொருள் உள்ளது. தமிழத்தில் நடக்கும் கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள், தற்கொலைகள், குடும்ப வன்முறைகள் குறித்த ஆய்வை அரசு சார்ந்த மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் சேகரித்து ஆய்வு செய்ததில் குற்றச் செயல்களுக்கு அடிப்படை விஷயமாக போதைப்பொருள் பழக்கம் உள்ளது கண்டறியப்பட்டது.

அதிலும் தமிழகத்தில் புற்றுநோய் போல் இளம் தலைமுறையினரை தாக்கும் வகையில் கஞ்சா, குட்கா போதைப்பொருள் பழக்கம் பள்ளி மாணவர்கள் வரை ஊடுருவியிருக்கும் அதிர்ச்சி தகவல் வெளியானது. கஞ்சா போதைப்பொருள் தமிழகத்தின் மிகப்பெரிய வியாபாரச் சந்தையாகவும், அதன்பின்னே ரவுடிகள் இயக்கமும் இருப்பதும், பள்ளி, கல்லூரிகளை குறிவைத்து இயங்குவதும் தெரியவந்தது. இதன் ஆய்வு முடிவுகள் அரசுக்கு அளிக்கப்பட்டது. இதையடுத்து தமிழக அரசும், காவல்துறையும் இந்த விவகாரத்தில் தீவிரம் காட்ட செயலில் இறங்கின. தமிழகத்தில் இளம் தலைமுறையினருக்கு அச்சுறுத்தலாக இருக்கும், சமுதாயத்தை அதிக அளவில் பாதிக்கும் கஞ்சா, குட்கா போதைப்பொருள் மற்றும் தடைச் செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை தமிழகத்திற்குள் அனுமதிக்காமல் தடுக்கும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்ட அரசு முடிவெடுத்தது. இதை தடுக்கும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியுள்ளது அரசு. இதன் அடிப்படையில் தமிழக காவல்துறை தலைவர் சைலேந்திரபாபு ஒரு சுற்றறிக்கையை காவல்துறையின் அனைத்து மட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பினார். அதில் அவர் கஞ்சா, குட்கா, லாட்டரியை கண்காணித்து நடவடிக்கை எடுப்பது குறித்து விரிவாக உத்தரவு பிறப்பித்தார். தமிழக போலீஸ் டிஜிபி சைலேந்திர பாபு காவல் துறை அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: கல்லூரி, பள்ளிகளுக்கு அருகில், கஞ்சா, குட்கா பொருட்கள் விற்பதை தடுக்க ஒரு மாதம் ஒழிப்பு வேட்டை நடத்தப்பட வேண்டும். குட்கா, கஞ்சா, லாட்டரி பொருள் விற்பவர்களை கண்காணித்து கைது செய்து சிறையில் அடைக்கவேண்டும், தொடர்ந்து இச்செயலில் ஈடுபடுபவர்களை குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும். கஞ்சா, குட்கா, லாட்டரி கடத்தல், பதுக்கல்விற்பனை நடவடிக்கை சங்கிலியை உடைக்க மொத்த கொள்முதல், விற்பனை செய்யும் நபர்கள் மீது கைது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.




அதனையடுத்து தமிழகத்தில் குற்றவாளிகளை பிடிக்கச் செல்லும் செல்லும்போது போலீசாரை குற்றவாளிகள் தாக்கும் சூழல் ஏற்பட்டால் துப்பாக்கி சூடு நடத்தவும் தயங்க கூடாது என தமிழக டிஜிபி சைலேந்திர பாபு கூறினார். மேலும் கந்துவட்டி வசூலிப்பவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டிஜிபி சைலேந்திர பாபு தெரிவித்துள்ளார். மேலும் காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை விடுமுறை வழங்க தமிழக டிஜிபி சைலேந்திர பாபு முடிவு வரவேற்கத்தக்கது.

# சாம்பியன் பட்டம் வென்ற அர்ஜெண்டினா



பிஃபா 22வது உலகக் கோப்பை கால்பந்து தொடரின் இறுதி ஆட்டத்தில் லயோனல் மெஸ்ஸி தலைமையிலான அர்ஜெண்டினா அணி பெனால்டி ஷூட் அவுட்டில் 42 என்றகோல் கணக்கில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது. 36 வருடங்களுக்குப் பிறகு தற்போதுதான் அர்ஜெண்டினா வாகை சூடியுள்ளது. அந்த அணி உலகக் கோப்பையை வெல்வது இது 3வது முறையாகும். பிஃபா 22வது உலகக் கோப்பைகால்பந்து தொடர் கடந்த மாதம் 20ம் தேதி கத்தாரில் கோலாகலமாக தொடங்கியது. 32 அணிகள் கலந்துகொண்ட இந்த பிரபஞ்ச திருவிழாவின் இறுதி ஆட்டம் நேற்று இரவுதோகாவின் லுசைல் நகரில் உள்ளலுசைல் மைதானத்தில் நடைபெற்றது. இதில் பட்டம் வெல்வதற்காக நடப்பு சாம்பியன் அந்தஸ்துடன் பிரான்ஸ் அணியானது, அர்ஜெண்டினாவை எதிர்கொண்டது. இந்த போட்டியை காண மைதானத்தில் 88 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்தனர்.

ஆட்டம் தொடங்கியதில் இருந்தே அர்ஜெண்டினா ஆதிக்கம் செலுத்தியது. 5வது நிமிடத்தில் அர்ஜெண்டினாவின் ஜூலியன் அல்வரெஸ் உதவியுடன் பந்தை பெற்ற அலெக்சிஸ் மேக் அலிஸ்டர் இலக்கை நோக்கி அடித்தார். இதைஇடது புறத்தில் பிரான்ஸ் கோல்கீப்பர் ஹ்யூகோ லொரிஸை தடுத்தார். 8வது நிமிடத்தில் அர்ஜெண்டினாவின் ரோட்ரிகோ டி பாலின் கோல் அடிக்கும் முயற்சி தடுக்கப்பட்டது. 17 வது நிமிடத்தில் அர்ஜெண்டினாவின் ஏஞ்சல் டி மரியா கோல் கம்பத்துக்கு மேல் பந்தை அடித்து ஏமாற்றம் அளித்தார்.


TPMJU
தமிழ்நாடு பிரிண்டிங்
மீடியா ஜார்னலிஸ்ட்ஸ் யூனியன்
Dr.சுடர் ஆ.முத்துக்குமரன்
9944007040
TAMIL NADU PRINTING
MEDIA JOURNALIST UNION

NNT
NAMADHU NAMBIKKAI TRUST
நமது நம்பிக்கை
அறகட்டளை {NAMADHU NAMBIKKAI TRUST}
No; 39,muthumari amman kovil st
moongil eri,pammal,chennai-75
A.MUTHUKUMARAN (President)
Reg No; BOOK-4/8/2022
Mobile : 9962400307 / 9944007040



# புயலோடு போராடும் பூக்கள்

சிங்கப்பூரில் நடைபெற்ற புயலோடு போராடும் பூக்கள் அறிமுக விழா நிகழ்ச்சியில் தாய்மொழிக் கலாச்சாரத்தை பேண வேண்டும் என்று மு.தமிமுன் அன்சாரி கேட்டுக்கொண்டார். மு.தமிமுன் அன்சாரி அவர்கள் எழுதிய ‘புயலோடு போராடும் பூக்கள்’ கவிதை நூல் கடந்த நவம்பர் மாதம் ஷார்ஜா சர்வதேச புத்தக சந்தையில் வெளியிடப்பட்டது. விற்பனையில் முந்திக் கொண்டிருக்கும் இந்நூலின் அறிமுக விழா சிங்கப்பூரில் நடைப்பெற்றது. முஸ்தபா சென்டர் எதிரில் இருக்கும் ஆனந்த பவனில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கவிமாலை காப்பாளர் மா.அன்பழகனார் அவர்கள் தலைமை தாங்கினார். மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் சட்டமன்ற உறுப்பினராக அவர் இருந்த போது, புனே சர்வதேச பல்கலைக்கழகம் சார்பில் இந்தியாவின் சிறந்த இளம் சட்டமன்ற உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டதை நினைவு கூர்ந்து, அவர் இலக்கியவாதியாக வளர்ச்சிப் பெற்றுள்ளதை வரவேற்று பேசினார்.

புதிய நிலா ஆசிரியர் மு.ஜஹாங்கீர் வரவேற்புரையாற்றும் போது, நூலாசிரியர் அவர்கள் சிங்கப்பூரோடும், சிங்கப்பூர் தமிழர்களோடும் கொண்ட தொடர்பை பற்றியும், அவரது தமிழ் பற்றையும் சிலாகித்து பேசினார். ஆல் இந்திய ரேடியோவின் முன்னாள் அறிவிப்பாளரும், சிங்கை இலக்கியவாதியுமான திருமதி ஸ்வர்ணலதா ஆவுடையப்பன் அவர்கள் நூலை திறனாய்வு செய்து பேசினார். ஒவ்வொரு கவிதைகளும் மனிதாபிமானத்தை முன்னிறுத்தி புதிய கோணத்தில் அணுகப்பட்டிருப்பதாக அவர் பாராட்டினார்.

பிறகு பிரபல தமிழறிஞர் முனைவர் சுப.திண்ணப்பனார் அவர்கள் நூலை அறிமுகப்படுத்த, பிரபல தொழில் அதிபரும் சமூக ஆர்வலருமான ஷி.வி. அப்துல் ஜலீல் அவர்கள் பெற்றுக் கொண்டார். பிறகு முஸ்தபா தமிழ் அறக்கட்டளை நிர்வாகி முகம்மது யாசீன், பிச்சினிக்காடு இளங்கோவன், கவி மாலை. மதியழகன் உட்பட பல பிரமுகர்கள் அடுத்தடுத்த நூல்களை பெற்றுக்கொண்டனர். ஏற்புரையாற்றிய மு.தமிமுன் அன்சாரி அவர்கள், ஹைக்கூ வடிவ



இக்கவிதைகள் குறைந்த வார்த்தைகளில் ஒரு மணி நேரத்திற்குள் வாசித்து முடித்து விடும் அளவிலேயே எழுதி இருப்பதாகவும், இலக்கிய வட்டத்தையும் தாண்டி, பொது மக்களிடம் இக்கருத்துகள் எளிதாக சென்று சேர வேண்டும் என்பதற்காக இவ்வாறு எழுதியிருப்பதாகவும் கூறினார். மொழி வழிக் கலாச்சாரத்தை பேண வேண்டும் என்றவர், தாய்மொழிக் கல்வியை பிள்ளைகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்றார்.

பல மொழிகளையும் கற்க வேண்டும் என்றவர், ஒரு மொழி, இன்னொரு மொழியை அழிக்கவோ, ஆதிக்கம் செலுத்தவோ கூடாது என்பது மட்டுமே நமது பார்வையாக இருக்க வேண்டும் என்றார். சிங்கப்பூர் அரசு தமிழ் மொழி மாதம் கொண்டாடுவதை வரவேற்றவர், தமிழை நான்கில் ஒரு அதிகாரப்பூர்வ மொழியாக பின்பற்றுவதற்காக சிங்கப்பூர் அரசையும், சிங்கையின் நிறுவன பிரதமர் லீக் வான் யூ அவர்களையும் பாராட்டுவதாக கூறினார். நிகழ்வை கவிஞர் இ.அஷ்ரப் அலி தொகுத்து வழங்கினார்.

ஆசியான் கவிஞர் இக்பால், மஜக இளைஞர் அணி மாநில செயலாளர் ஹமீது ஜெகபர், அன்பு அக்பர், ஜர்ஜிஸ் உள்ளிட்ட மனிதநேய சொந்தங்களும், பல சிங்கை பிரபலங்களும், சமூக செயல்பாட்டாளர்களும் பாராட்டுகளை தெரிவித்தனர்.



# அதிகரிக்கும் பாலியல் வல்லுறவு சம்பவங்கள்

## 'பாலியல் கல்வி' தான் ஒரே தீர்வு

இந்தியாவில் 'போக்சோ' போன்ற கடுமையான சட்டங்கள் இருந்தும்,பெண்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவு சம்பவங்கள் நாள்தோறும் அதிகரித்து வருவதற்கு காரணம் சட்டம் பற்றிய சரியான புரிதல் இல்லாததே என சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டு கின்றனர். அதேநேரம் 'பாலியல் கல்வி தான் இதற்கு ஒரே தீர்வு' என்கிறார் உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி எஸ்.விமலா. கடந்த 1972ம் ஆண்டு இந்தியாவில் சிறைக்காவலில் இருந்த மதுரா என்ற பழங்குடியினப் பெண், மகாராஷ்டிராவின் கட்சிரோலி மாவட்டத்தில் காவல்நிலைய வளாகத்தில் 2 போலீஸாரால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டார். குற்றம்சாட்டப் பட்டவர்களை உச்ச நீதிமன்றம் விடுவித்த பிறகு, பொதுமக்கள் நடத்திய போராட் டத்தால் குற்றவியல் சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அதேபோல கடந்த 2012ம்ஆண்டு டெல்லியில் ஓடும் பேருந்தில்நடந்த நிர்பயா பாலியல் வல்லுறவு சம்பவத்துக்குப் பிறகே பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் 'போக்சோ சட்டம் 2012' பற்றிய விழிப்புணர்வு அதிகம் ஏற்பட்டது.

ஆனால் நிர்பயா வழக்கில் கைதான 4 குற்றவாளிகளும் தூக்கிலிடப்பட்ட பிறகும், இந்தியாவில் பாலியல் வல்லுறவு சம்பவங்கள் குறைந்துள்ளதா என்றால் கேள்விக்குறியே மிஞ்சுகிறது. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் தினமும் பெண்களுக்கு எதிராக 95 பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அரங்கேறி வருவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அதுவே குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை தினமும் 100ஐத் தாண்டுகிறது. கடந்த 2020ல் மட்டும் நாடு முழுவதும் 73 ஆயிரத்து 721 பெண்கள் கடத்தப்பட்டுள்ளதாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 47 ஆயிரத்து 876 பேர் சிறுமிகள். 25 ஆயிரத்து 845 பேர் வளரிளம் பருவத்தினர். அதேபோல் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்காக கடந்த 2020ல் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 531 வழக்குகள் பதிவாகியுள்ளன. அதில், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வல்லுறவுக்காக மட்டும் 38.8 சதவீத வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. கடந்த 2020 கணக்கெடுப்பின்படி நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ள ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 558 பாலியல் வல்லுறவு வழக்குகளில் 3 ஆயிரத்து 814 பேருக்கு மட்டுமே சட்டரீதியாக தண்டனை பெற்று கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டரை வயது பெண் குழந்தைக்கு எதிரான ஒரு பாலியல் வழக்கில் 'செமன்' என குறிப்பிடுவதற்குப் பதிலாக 'செம்மண்' என போலீஸார் ஆங்கிலத்தில் தவறுதலாக ஆவணங்களில் குறிப்பிட்டதால், அதைப் பயன்படுத்தி குற்றவாளி தண்டனையில் இருந்து தப்ப, அந்தத் தவறை உயர் நீதிமன்றம் சரிசெய்து குற்றவாளிக்கு சிறை தண்டனை விதித்தது. ஒருவேளை அந்த பாதிக்கப்பட்ட குழந்தையின் தாயார் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்காவிட்டால் அந்த குற்றவாளிக்கு தண்டனைகிடைத்து இருக்காது. இதுபோல சட்டத்தில் உள்ள முரண்பாடுகள் அவ்வப்போது குற்றவாளிகளுக்கு சாதகமாகிவிடுகிறது. இந்தியாவில் சட்டங்கள் கடுமையாக இருந்தும், அதற்கான உள்கட்டமைப்புகள் இருந்தும் சட்டம் பற்றிய புரிதல் படித்தவர்கள் மத்தியிலும் சரியாக இல்லை என சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டு கின்றனர்.



# விவசாயிகளின் தங்க மகன்

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள வெளக்கல்நத்தம் என்ற சிறிய கிராமத்தில் அமைந்துள்ள ஃப்ரெஷரா பிக்ல்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் FRESHARA PICKLZ EXPORTS 100 % EOU (MEPZ ன் கிழ் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதி நிறுவனம் GHERKIN எனப்படும் வெள்ளரிக்காய் மற்றும் கெரிக்கின்ஸ் பேபிகான், சில்லிஸ், போன்ற காய்கறிகளை பயிரிடும் பணியில் ஈடுபட்டுள்ளது. இது ஒப்பந்த விவசாய முறையில் வளர்க்கப்பட்டு, கொள்முதல் செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, மொத்தமாக பேக் செய்யப்பட்டு மேற்கு ஐரோப்பா விற்கும் அமெரிக்காவிற்கும் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஒப்பீட்டளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தைகள் ஆஸ்திரேலியா மற்றும் கிழக்கு ஆசியாவின் தெற்கே ஆகும்.

இது கிட்டத்தட்ட அனைத்து ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவில் ஊறுகாயாக பயன்படுத்தப் படுகிறது. உறுதி செய்யப்பட்ட நீர்ப்பாசன வசதியுடன் அடையாளம் காணப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிறுவனம் விதைகளை வழங்குகிறது. விவசாயிகளுக்கு உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தரமான பயிரை விளைவிக்க தேவையான பொருட்கள் ஆகியவையும் வழங்கப்படுகிறது. தகுதிவாய்ந்த வேளாண் விரிவாக்க பணியாளர்கள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப அறிவும் வழங்கப்படுகிறது. விளைபொருட்களை நேரடியாக வயலில் இருந்து சேகரிக்கும் நிறுவனத்தால் 100% திரும்ப வாங்கும் ஏற்பாடு விவசாயிகளுக்கு உறுதியளிக்கப்படுகிறது. பயிர்களை கொண்டு செல்ல நிறுவனத்தால் அதன் நேரடி உழியர்களின் மூலம் தொழிற்சாலைக்கு எடுத்து செல்லப்படுகிறது. பயிர் 90 நாட்கள் நீடிக்கும் மற்றும் 35 வது நாளில் இருந்து மகசூல் கொடுக்கத் தொடங்குகிறது. காய்கனிகள் ஆரம்ப நிலையிலேயே அறுவடை செய்யப்படுகின்றன. கனிகள் வடிவியல் வளர்ச்சியில் வளர்ந்து பல்வேறு தரங்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுவதால், அறுவடையின் போது விவசாயிகள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒரு கிலோ காய்கனிகள் எண்ணிக்கை கிரேடுகளுக்கு அடிப்படையாக அமைகிறது. ஒரு கிலோ காய்கனிகள் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், விவசாயிக்கு நல்ல விலை கிடைக்கும். உள்நாட்டு சந்தையில் சாதாரணமாக உட்கொள்ளப்படும் பெரிய அளவிலான காய்கனிகள் என்ற எண்ணம் இங்கு வேலை செய்யாது. அறுவடை நேரத்தில் எந்த அலட்சியமும் அதிக எண்ணிக்கையிலான பெரிய காய்கனிகள் விளைவித்து, குறைவான உணர்தலுக்கு வழிவகுக்கும் மற்றும் பயிர் பொருளாதாரமற்றதாக இருக்கும். இந்த கட்டத்தில் விவசாய விரிவாக்கப் பணிகள் மற்றும் விவசாயிகளின் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. எங்களின் அதிகபட்ச ஏற்றுமதி வருவாயைப் பதிவு செய்துள்ளோம்.

2016–17 ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதி சிறப்பு விருதுக்காக இந்திய ஏற்றுமதி அமைப்பின் கூட்டமைப்பு “சிறந்த MSME –யின் ஏற்றுமதியாளர் தென் மண்டலம் வெள்ளி விருதினை பெற்றுள்ளோம்“ “எமர்ஜிங் எக்ஸ்போர்ட்டர் விருது தென் மண்டலம் ‘’2017–18” MSME GOLD க்கு இந்திய ஏற்றுமதி அமைப்பின் கூட்டமைப்பு மீண்டும் எங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. MEPZ சிறப்புப் பொருளாதார மண்டலம், சென்னை, “உணவு மற்றும் விவசாயப் பொருட்களில் அதிக ஏற்றுமதி செய்ததற்காக 2019–20க்கான எக்ஸ்போர்ட் எக்ஸலன்ஸ் விருதுக்காக” நாங்கள் தேர்வு செய்யப்பட்டோம். 2021–22 ஆம் ஆண்டிற்கான சிறந்த வேளாண்மை சார்ந்த தொழில்துறைக்கான மாநில அளவிலான விருதுக்கு தமிழ்நாடு அரசாங்கத்தின் MSME ஆல் நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம். 2023 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஏற்றுமதிக்கான MSME மூலம் ASSOCHAM, (கொல்கத்தா) மூலம் சிறப்பான விருதினை பெற்றார். அதனை தொடர்ந்து இவை அனைத்தையும் பாராட்டி நமது தேடல் நாளிதழ் “தங்கமகன் விருது” வழங்கி கௌரவித்தது.

Freshara Picklz



# ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

ஒழுக்கம் இல்லாதவன் இடத்தில் கல்வியிராது என முகமது நபி அவர்கள் கூறியுள்ளார்கள்.

மேலும் திருவள்ளுவர் ஒழுக்கத்தை பற்றி என்ன கூறுகிறார் என்பதை கீழே காண்போம் மனிதனுக்கு என்றும் நீங்காத மேன்மையை தரவல்லது அவரது நல்லொழுக்கமே எனவே நல்லொழுக்கத்தை தன் உயிரை விட மதித்து காத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் ஒழுக்கத்தை கடைப்பிடிப்பவர் நல்ல குடியில் பிறந்தவர் என்றும் ஒழுக்கம் தவறியவர் இழிந்த குடியில் பிறந்தவர்குறிய பண்புடையார் என்றும் கூறியிருக்கிறார்.

அண்ணல் காந்தியடிகள் ஒழுக்கத்தை பற்றி கூறும்போது The boys and girls do not learn discipline from their school and college. The money spent on their education is a national loss.

கோடி ரூபாயை ஆண்டு ஒன்றுக்கு கல்விக்காக செலவிடுகிறது. காரணம் இன்றைய கல்வி கற்கும் மாணவ இளைஞர்கள் நாளைய பாரதத்தை சிறப்பாக ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களாக உண்மைக்கு வழக்காடு வழக்கறிஞராக விந்தே செய்யும் விஞ்ஞானியாக நோய் விரட்டும் புதுப்புது மருந்து காணும் மருத்துவராக கட்டிடக்கலை சிற்பியாக கடையில் பிளந்து கப்பலோட்டி மாலுமியாக பண்புள்ள ஆசிரியராக ஆக வேண்டும் என்பதற்காகத்தான்.

முகமது நபி அவர்கள் கூறியதாவது உங்களில் இரு உதடுகளுக்கு இடையே உருப்பாகிய நாக்கு மற்றும் இரு தொடைகளுக்கு இடையே உள்ள உறுப்பாகிய அந்த மர்ம ஸ்தானத்தை நீங்கள் உங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டால் நீங்கள் சுவனம் புக நான் பொறுப்பேற்றுகொள்கிறேன் காரணம் மனிதனின் ஒழுக்கக் கோட்டிற்கு இந்த இரண்டு உறுப்புகளும் காரணம் என்பதை யாவரும் அறிவர் மேலும் தனது நாவாலும் கரங்களாலும் பிறருக்கு தொல்லை தராத வரே உண்மை விசுவாசி என்றும் ஏந்தல் நபி அவர்கள் கூறினார்கள்.

பெரியவர்கள் சிறுவர்களிடம் அன்பு காட்ட வேண்டும் சிறுவர்கள் பெரியவர்களிடம் மரியாதையாக நடக்க வேண்டும் என்று நபி அவர்கள் காட்டிய வழி ஒழுக்கத்திற்கு வெளிச்சம் ஊட்டும் என்பதை யாராலும் மறுக்க முடியாது எனவே நாம் யாவரும் சிறந்த பண்புள்ள மனிதர்களாக திகழ வேண்டும்.

**து.பா.சாகுல் ஹமீது**
**தலைமை ஆசிரியர்,**
**முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி**

# உறவுகள் டிரஸ்ட்
## கடந்து வந்த பாதைகள்.....







**உறவுகள் டிரஸ்ட் கடந்த 2017 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட அமைப்பு**
**உறவுகளில் 525 தன்னார்வலர்கள் பயணிக்கிறார்கள்**
**2 ஆம்புலன்ஸ்கள், 4 அமரர் ஊர்திகள் உள்ளது. 4 டிரைவர்கள் பணிசெய்கிறார்கள்**
**கடந்த 2017 ஆண்டு முதல் தற்போது வரை ஏறத்தாழ 7000 ஆதரவற்ற உடல்களை நல்லடக்கம் செய்து உள்ளார்கள். கொரோனா காலகட்டத்தில் உடல்கள் நல்லடக்கம், தகனம் மற்றும் சமூகப்பணிகளையும் செய்து உள்ளார்கள்.**

# மருத்துவம் ஒரு சிறப்பு பார்வை



Dr.F.பக்ருதீன் (MS.Ortho)

மருத்துவம் ஒரு சிறப்பு பார்வையில் Dr.F.பக்ருதீன் MS ORTHO அவர்கள் விளக்கம் அளிக்கிறார். அதில் நாம் ஆரோக்கியமாக இருக்கிறோம் என்பதற்கு சிறந்த அடையாளம் நாம் சுறுசுறுப்பாக அனைத்து செயல்களிலும் ஈடுபடுவதுதான். அப்படி நாம் இயங்குவதில் முக்கியப்பங்கு வகிப்பது எலும்புகள், அதிலும் குறிப்பாக மூட்டுகள் வலிமையுடன் இருத்தல் அவசியம். இல்லாவிட்டால் தினசரி நடவடிக்கைகளான நடத்தல், ஓடுதல் மற்றும் ஏறுதல் போன்ற அனைத்திலும் பாதிப்பு ஏற்படும். இதனால் நாம் நமது உறுதியை இழக்க நேரிடும். குறிப்பிட்ட வயதிற்கு பிறகு பெரும்பாலானோருக்கு ஏற்படக்கூடிய பிரச்னைகளில் ஒன்று மூட்டு ஆர்த்ரிட்டிஸ், முதுகு வலி மற்றும் குதிகால் வலி நம்முடைய மொத்த இயக்கத்தினை முடக்கி இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு நாம் முடிந்த அளவு நம்ம உடல் செயல்பாட்டினை சீரான பயிற்சியுடன் இந்த பிரச்சினை களை முறியடிக்கலாம். இந்த பிரச்னைக்கு நிரந்தர தீர்வு இல்லையென்றாலும் வலியை குறைக்க சில வழிகள் இருக்கின்றன. எலும்பு மருத்துவரை அணுகி பரிசோதித்து அவற்றை முறையாக பின்பற்றுதல் அவசியம்.



**பொதுவாக 2 வகைகளாகப் பிரிக்கலாம்.**

**1) முதுமை மூட்டழற்சி**

**2) முடக்கு வாதம்**

முதுமை மூட்டழற்சி என்பது, மெதுவாக வளர்ச்சி அடைந்து மூட்டுகளில் வலியையும், விறைப்பு தன்மையையும் ஏற்படுத்தக்கூடியதாகும். இப்பிரச்சனை முக்கியமாக நடுத்தர வயதினர் மற்றும் முதியவர்களிடத்தில் அதிகம் காணப்படுகிறது. மேலும் உடலியக்க இயக்கத்தினால் ஏற்படும் அழுத்தம் அல்லது உயிர்வேதியியல் மாற்றங்கள் காரணமாக குருத்தெலும்புகளில் ஏற்படும் முறிவு எடை தாங்கும் மூட்டுகளை பாதிக்கிறது. இந்நோய் சில நேரங்களில் பிற வகை கீல்வாத பிரச்சனைகளுடனும் காணப்படலாம். இந்த கீல்வாதம் பிரச்சனையால் உடலில் உள்ள எந்த ஒரு மூட்டும் பாதிக்கப்படலாம் எனினும், கையில் உள்ள சிறிய மூட்டுகள், முழங்கால்கள் மற்றும் இடுப்பு பகுதிகளில் பொதுவாக இந்த பாதிப்பு ஏற்படுகிறது.

**அறிகுறிகள்:**

- மூட்டுகள் வழக்கமானதை விட மெலிந்து மற்றும் பெரிதாக வீங்கி காணப்படுதல்.
- மூட்டுகளில் விரிசல் சப்தம், மென்மையான உணர்வு அல்லது உராய்கிற சப்தம் ஏற்படுதல்.
- தினசரி நடவடிக்கைகளை செய்வதில் சிரமம்.
- விரல்கள் வளைந்து காணப்படுதல்.
- பாதிக்கப்பட்ட பகுதிகளில் வலிமிகு புடைப்புகள் அல்லது திரவ நிரப்பு கட்டிகள் தோன்றுதல்.
- காயத்திற்கு பிறகு அதிகமான மூட்டுகளின் செயல்பாடு.
- முடக்கு வாதம் அல்லது கீல்வாதம் போன்ற நோய்களின் காரணமாக கடுமையாக சேதமடைந்த மூட்டுகள்.
- அதிக எடை அல்லது வயதுமுதிர்வு அல்லது குடும்பத்தில் இந்நோய் பாதிப்பு உள்ளவர்கள்.

சோதனை மற்றும் மதிப்பீடு

- குறிப்பிட்ட இரத்த பரிசோதனைகள்.
- எலும்பு முறிவு அல்லது முடக்கு வாதம் ஆகியவற்றை தீர்மானிக்க பாதிக்கப்பட்ட பகுதிகளில் எக்ஸ் கதிர் ஸ்கேன் எடுத்தல்.

**சிகிச்சை முறைகள்:**

- உடல் எடையை சரியான அளவில் நிர்வகிக்க தினசரி உடற்பயிற்சி.
- பொருத்தமான சாதனங்களுடன் சரியான காலணி உபயோகிப்பதன் மூலம் மூட்டுகளில் ஏற்படும் அழுத்தங்களை கட்டுப்படுத்துதல்.
- ஊட்டச்சத்து உணவுகள்.
- பிசியோதெரபிஸ்ட் மேற்பார்வையின் கீழ் பயிற்சி மேற்கொள்ளுதல் பிசியோதெரபி சார்ந்த உடற்பயிற்சி திட்டம்.
- சூடான அல்லது குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும் அல்லது ஒத்தடம்
- அறுவை சிகிச்சை
- மூட்டுச்சீரமைப்பு.
- மூட்டுநீக்கி.
- எலும்பு வெட்டு அறுவை சிகிச்சை

**முடக்கு வாதம்**

ஸிகி என்றும் அழைக்கப்படுகிறது. இது ஒரு பொதுவான தன்னுடல் தாக்கநோயாகும்.

பொதுவாக, மூட்டு சேதம் உடலின் இரு பக்கங்களையும் பாதிக்கிறது, அதாவது கைகள் அல்லது

கால்களில் ஒரு மூட்டில் இந்த நிலை ஏற்பட்டால், அது மற்றொரு கை அல்லது காலிலும் ஏற்படலாம். முடக்கு வாதம் எந்த வயதிலும் தொடங்கலாம், ஆனால் பெரும்பாலும் 30 முதல் 50 வயது வரையிலான நபர்களை பாதிக்கிறது. தவிர, பெண்களுக்கு இந்த நிலை உருவாகும் வாய்ப்பு அதிகம். முடக்கு வாதத்திற்கான சிகிச்சையானது அதன் ஆரம்ப கட்டங்களில் கண்டறியப்பட்டால் சிறப்பாக செயல்படுகிறது

**அறிகுறிகள்:**

மூட்டு விறைப்பு குறிப்பாக காலையில் மிக மோசமாக உள்ளது மற்றும் சில மணிநேரங்கள் அல்லது நாள் முழுவதும் கூட நீடிக்கும்.

- பசியின்மை மற்றும் ஆற்றல் இழப்பு
- குறைந்த காய்ச்சல்
- Sjogren's syndrome போன்ற தொடர்புடைய உடல்நலப் பிரச்சினையின் காரணமாக உலர் கண்கள் மற்றும் வாய்முழங்கை மற்றும் கைகளின் தோலுக்கு அடியில் உறுதியான கட்டிகளை உருவாக்குவது முடக்கு முடிச்சுகள்.

**கண்டறிதல்**

முடக்கு வாதத்தை துல்லியமாக கண்டறிய பல ஆய்வக சோதனைகள் நடத்தப்படுகின்றன

- வீக்கம் மற்றும் சிவத்தல் போன்ற ஏதேனும் காணக்கூடிய அறிகுறிகளைத் தேடுகிறது
- மூட்டுகளின் இயக்கம் மற்றும் அவற்றின் செயல்பாடுகளின் வரம்பைச் சரிபார்க்கிறது
- வெப்பம் அல்லது மென்மைக்கான மூட்டுகளை ஆய்வு செய்தல்
- அனிச்சைகளை சோதித்தல்
- முடக்கு காரணி அல்லது ஸிதி இரத்த பரிசோதனை
- ஆன்டிசிசிபி அல்லது ஆன்டிசிட்ருலினேட்டட் புரோட்டீன் ஆன்டிபாடி சோதனை
- உங்கள் நோயெதிர்ப்பு அமைப்பு ஆன்டிபாடிகளை உருவாக்குகிறதா என்பதைச் சரிபார்க்க ஆன்டிநியூக்ளியர் ஆன்டிபாடி சோதனை

**முடக்கு வாதத்திற்கான மருந்துகள்**


- ஸ்டெராய்டல் அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகள் அல்லது ழிஷிகிமிஞிகள்
- நோயை மாற்றியமைக்கும் வாதநோய் எதிர்ப்பு மருந்துகள் அல்லது டிஎம்ஆர்டிகள்:

**ஸ்டெராய்டுகள்:**

மருந்துகளால் மூட்டு சேதத்தை குறைக்கவோ அல்லது தடுக்கவோ முடியாவிட்டால் அறுவை சிகிச்சை பரிசீலிக்கப்படலாம். இது வலியைக் குறைப்பது மட்டுமல்லாமல், மூட்டுகளின் செயல்பாட்டை மீட்டெடுக்கவும் முடியும். சில அறுவை சிகிச்சை முறைகளில் சினோவெக்டமி, தசைநார் பழுது, மூட்டு இணைவு மற்றும் மொத்த மூட்டு மாற்று ஆகியவை அடங்கும்.

**முதுகு வலியை தவிர்க்கும் முறைகள்:**

நெடுநேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து பணி செய்கின்ற போது முதுகெலும்பு அதிக அழுத்தத்திற்கு ஆளாகிறது. குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறையாகிலும் இருக்கையை விட்டு நிமிட நேரம் நின்று சிறிது தூரம் நடந்து பின்னர் வந்து அமருங்கள். உங்கள் பணி நிமித்தம் நெடுநேரம் நிற்க வேண்டி வந்தால் அது



உங்கள் இடுப்பு மூட்டுக்களையும், முதுகு எலும்பையும் பாதிக்கக் கூடும். ஒரு காலை நேராகவும், மற்றொரு காலைச் சற்று மடக்கிய நிலையிலும் வைத்து நிற்கலாம். சிறிய பலகை அல்லது குட்டி ஸ்டூலின் மேல் ஒரு காலை வைத்துக் கொள்ளலாம். தரையில் கிடக்கும் பொருள்களைக் குனிந்து எடுக்காதீர்கள். குத்துக்காலிட்டு உட்கார்ந்து அதன் பின் எடுங்கள். நீண்ட நடைப்பயிற்சியில் ஈடுபடுங்கள். உடல் எடையை இயன்ற அளவு கட்டுக்குள் வையுங்கள். பெண்கள் தங்கள் பிட்டப் பகுதியின் எடை பெரிதும் மிகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தினமும் 4 கிலோ மீட்டராவது நடக்கின்ற பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். முதுகுவலி பற்றியே எந்த நேரமும் சிந்தனை செய்து வாழ்வை நரகமாக்கிக் கொள்ளாதீர்கள். எல்லோருக்கும் வரக்கூடிய ஒன்று தான் என்று இயல்பாக எடுத்துக் கொள்ளுங்கள்.

**குதிகால் வலி**

முப்பது வயதிலிருந்து நாற்பது வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இரு பாலருக்கும் இது வருகிறது. ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களுக்கு சற்று அதிகமாகவே இந்தப் பாதிப்பு ஏற்படுகிறது. அதிக உடல் எடை உள்ளவர்களுக்கும் இந்தப் பாதிப்பு அதிகம். அதற்காக ஒல்லியானவர்களுக்கு இது வராது என்று சொல்லமுடியாது. அப்பா, அம்மாவுக்கு இது வந்திருக்குமானால் அவர்களின் வாரிசுகளுக்கும் இது ஏற்படுவதுண்டு. நீண்ட நேரம் நின்றுகொண்டு வேலை செய்கிறவர்கள், விளையாட்டு வீரர்கள், ராணுவத்தில் பணி செய்பவர்கள் ஆகியோருக்கு இது வருகிறது. முறைப்படி 'வார்ம் அப்' பயிற்சிகளைச் செய்யாமல் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்டால் நாளடைவில் குதிகால் வலி வந்துவிடும்

இன்றைய பெண்களில் பலரும் 'ஹைஹீல்ஸ்' செருப்புகளை அணிகின்றனர். குதிகாலை உயரமான நிலையில் வைத்திருக்க உதவுகிற இந்தக் காலணிகள் பாதத்துக்குச் சமமான அழுத்தத்தைத் தருவதில்லை. இவற்றைக் காலில் போட்டுக்கொண்டு நடக்கும்போது, பிளான்டார் திசுக் கொத்து மிகவும் விரிந்த நிலை யிலையிலேயே நாள் முழுவதும் இருப்பதால், சீக்கிரமே அழற்சி அடைந்து குதிகால் வலியை ஏற்படுத்திவிடும். சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு குதிகால் வலி இளம் வயதிலேயே வந்துவிடுகிறது. காரணம், ரத்தச் சர்க்கரையைக் கட்டுப்படுத்தத் தவறும்போது, அந்த அதீத சர்க்கரையானது குதிகால் எலும்பு மூட்டுகளில் தேங்கும். அப்போது அங்குள்ள திசுக்களை அது அழிக்கத் தொடங்கும். இதன் விளைவால் இவர்களுக்குக் குதிகால் வலி வரும்.



# தமிழ்நாடு அரசின் ரூ.1000 உயர் கல்வி உதவித் தொகை பெற

## தகுதிகள் என்ன? எங்கு விண்ணப்பிப்பது?

அரசு பள்ளியில் படித்த மாணவியருக் கான ரூ.1000 உயர் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்க, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித்திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும், இடைநிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை, மாதம் ரூ.1,000/ வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும். இந்த மாணவிகள் ஏற்கனவே பிற கல்வி உதவித்தொகை பெற்று வந்தாலும் இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம்.

**தகுதிகள் என்ன?**

6ம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் படித்து தமிழ்நாட்டில் உயர்கல்வி பயில்பவராக இருத்தல் வேண்டும்.

தனியார்ப் பள்ளியில் கல்வி உரிமை சட்டத்தின் கீழ் 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பயின்ற பின் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்த மாணவியர் இத்திட்டத்தின் கீழ் பயனடையலாம்.

அரசுப் பள்ளிகள் என்பது பஞ்சாயத்து யூனியன் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், மாநகராட்சி பள்ளிகள், பழங்குடியினர் நலப் பள்ளிகள், கள்ளர் சீர்மரபினப் பள்ளிகள், பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளிகள், மாற்றுத்திறனாளி கள் நலத்துறை பள்ளிகள், வனத்துறை பள்ளிகள், சமூகப் பாதுகாப்புத் துறை பள்ளிகள் போன்றவற்றில் பயிலும் மாணவிகளும் இத்திட்டம் பொருந்தும்.



அ.காஜா மொய்தீன்
துணை ஆசிரியர்

மாணவிகள் 8 (அ) 10 (அ) 12 வகுப்புகளில் படித்து பின்னர் முதன் முறையாக உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் படிப்புக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும். சான்றிதழ் , பட்டயம் , இளங்கலைப் பட்டம் , தொழில் சார்ந்த படிப்பு மற்றும் பாரா மெடிக்கல் படிப்பு போன்றவைகளில் சேருபவர்களுக்கு இது பொருந்தும் தொலைதூரக் கல்வி மற்றும் திறந்தவெளி பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவிகளுக்கு இத்திட்டம் பொருந்தாது. 2022-2023ம் கல்வியாண்டில், மாணவியர்கள் புதிதாக மேற்படிப்பில் முதலாம் ஆண்டு சேர்ந்த பின்னர், இணையதளம் வழியாக இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். இதர முதலாம் ஆண்டிலிருந்து இரண்டாம் ஆண்டு செல்லும் மாணவியரும், இரண்டாம் ஆண்டிலிருந்து மூன்றாம் ஆண்டு செல்லும் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவியர்களும், தொழிற் கல்வியைப் பொருத்தமட்டில் மூன்றாம் ஆண்டிலிருந்து நான்காம் ஆண்டிற்கு செல்லும் மாணவிகளுக்கும், மருத்துவக் கல்வியைப் பொருத்தமட்டில் நான்காம் ஆண்டிலிருந்து ஐந்தாம் ஆண்டு செல்லும் மாணவியர்களும் இத்திட்டத்தின் கீழ் பயனடையலாம். 2021-2022ம் ஆண்டில், இறுதியாண்டு பயிலும் மாணவிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைய இயலாது.

ஏனெனில் ஒரு சில மாதங்களில் இம்மாணவியர்கள் தங்களது இளநிலைப் படிப்பினை நிறைவு செய்துவிடுவார்கள். இத்திட்டத்தின் கீழ் இளநிலை படிப்பு பயிலும் மாணவிகள் மட்டுமே பயனடைய இயலும். முதுநிலை படிப்பு பயிலும் மாணவியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற இயலாது.

**எப்படி விண்ணப்பிக்க வேண்டும்?**

இத்திட்டத்திற்காகப் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள இணையதளம் https://penkalvi.tn.gov.in வழியாக தங்கள் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கூடுதல் தகவல்களுக்கு கட்டணமில்லா தொலைப் பேசி எண். 14417 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.




# வாகன விபத்தில் நஷ்டஈடு பெறுவது எப்படி...?

I.சதாம் உசேன் B.A, B.L.,

நம் நாட்டில் தினமும் சுமார் 400 நபர்களுக்கு மேல் வாகன விபத்துகளினால் இறக்கின்றனர். மோட்டார் வாகன சட்டம் 1939 939 Motor Vehicles Act பல்வேறு மாற்றங்களுடன் 1988 ஆம் ஆண்டு நமது நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அது ஜூலை 1989 முதல் அமலுக்கு வந்தது. இது 9 பாகங்களாக பிரிக்கப்பட்டு மொத்தம் 269 சட்டப் பிரிவுகளைக் கொண்டுள்ளது.



மோட்டார் வாகனச் சட்டம் ஓட்டுநர், நடத்துநர் உரிமம் வழங்குதல் வாகனங்கள் பதிவு செய்தல், தகுதிச் சான்று வழங்குதல், இன்ஸூரன்ஸ், வாகன விபத்திற்கு அபராதம் மற்றும் தண்டனை வழங்குதல் போன்ற எல்லா அம்சங்களையும் தன்னிடத்தே கொண்டுள்ளது.

வாகன விபத்துகளினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு தகுந்த நிவாரணம் வழங்கிட 1959 ஆம் ஆண்டு மோட்டார் வாகன விபத்துத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. வாகன விபத்துகளினால் பாதிக்கப்பட்ட பெரும்பான்மையோர் சரியான விழிப்புணர்வு இல்லாமல் காவல்துறை, விசாரணை, நீதிமன்றம் என்று அலைய வேண்டி வரும் என்று தவறாக எண்ணி, முறையாக நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர். ஆனால், உண்மையில் வாகன விபத்துகளினால் பாதிக்கப்பட்ட மக்கள் தகுந்த நிவாரணம் பெற்றிட சட்டம் எல்லா வழிகளிலும் நமக்குத் துணை புரிகிறது.



இதுபற்றிய முழு விபரங்கள் அறிந்துகொள்ள டெல்லியில் நடந்த ஒரு வாகன விபத்தின் வழக்கு பற்றிய விபரங்களைப் பார்ப்போம்.

காஜல் சர்மா என்பவர் தனது கணவருக்குச் சொந்தமான வாகனத்தை புதுடெல்லி பெருநகர ரெயில்வே நிலையம் அருகே அஜாக்கிரதையாகவும் வேகமாகவும் ஓட்டி வந்து வாதிகள் அம்ரஜித் / நஹித் மாலிக் மற்றும் அப்ரஷ் அகமது ஆகியவர்கள் வந்த ஆம்னி வாகனத்தின்மேல் மோதி காயமடையச் செய்தார். இது பற்றிய வழக்கு மோட்டார் வாகன விபத்துத் தீர்ப்பாயத்திற்கு வந்தது.

பொதுவாக இதுபோன்ற வாகன விபத்து சம்பந்தப்பட்ட வழக்குகளில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய சட்டவிதிகள்: வாகனத்தை ஓட்டி வந்த நபர் அலட்சியமாக அஜாக்கிரதையாக ஓட்டி வந்து மோதியது பற்றி பாதிக்கப்பட்ட நபர் எந்த வகையிலும் நிரூபிக்க வேண்டியத் தேவையில்லை. ஒரு வேளை வாகனத்தை ஓட்டிவந்தவரும் நீதிமன்றத்தில் தான் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டிடவில்லை என்று வாதாட முடியாது.

காவல்துறை முறையாக விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்த பின்னர் விபத்தில் பாதிக்கப்பட்ட நபர் நீதிமன்றத்தில் பிரதிவாதியின் குற்றத்தை நிரூபிக்க வேண்டியத் தேவையில்லை. மோட்டார் வாகன விபத்துத் தீர்ப்பாயத்தில் நீதிமன்ற வழக்குகளைப் போல் குற்றம் நடந்ததா என்பதை முழுமையாக விசாரணை நடத்த வேண்டியத் தேவையும் இல்லை. இதுபற்றிய முழு விளக்கத்தை இன்ஸூரன்ஸ் நிறுவனம் (எதிர்) புஷ்பா ராணி என்ற வழக்கில் தெளிவான தீப்பினை வழங்கி உள்ளது.

அதாவது வாகன விபத்துகளின் வழக்கைப் பொறுத்தவரை காவல்துறை முழுமையாக விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துவிட்ட பிறகு வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்திய நபரின் குற்றத்தை பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய தேவையில்லை.

நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் கிஸி 1995/ ஷிசி/755 என்ற வழக்கின் தீர்ப்பின் மூலம் விபத்தினால் பாதிக்கப்பட்ட நபருக்கு எந்த முறையில் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்பதை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

வாகன விபத்தின் பாதிப்புகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

**1. பொருளாதார ரீதியான பாதிப்பு:**

(Pecuniary Damage): பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவுகள் மீண்டும் பணிக்கு திரும்பும் வரை மாத வருமானத்தில் ஏற்படும் இழப்பு ஆகியவைகள் Pecuniary Damage என்று அழைக்கப்படும்.

2. Non Pecuniary Damage (மனரீதியான பாதிப்பு): மனரீதியான பாதிப்புகள், உடல் ஊனமடைவதால் ஏற்படும் பாதிப்புகள், அதாவது நடக்கமுடியாமை, கைகள் செயல்பட முடியாமை போன்ற பாதிப்புகள் Non Pecuniary Damage என்று அழைக்கப்படும்.



மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து அம்சங்களையும் நன்கு ஆராய்ந்த பிறகு பாதிக்கப்பட்டவருக்கு முறையான நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என உச்சநீதிமன்றம் உறுதிபட அறிவுறுத்தி உள்ளது. கட்டுரையில் ஆரம்பத்தில் குறிப்பிட்ட வழக்கில் மோட்டார் வாகன விபத்தில் தீர்ப்பாயம் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தது.

அதாவது விபத்தினால் பாதிக்கப்பட்ட வாதி அமர்ஜித் பண்டிட் 4 முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு 120 நாட்கள் புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்ற பிறகு ஓரளவிற்கு குணமடைந்து உள்ளார். மருத்துவமனையில் செலுத்திய தொகை ரூ.5242/_க்கு முறையாக ஆதாரத்தை சமர்ப்பித்துள்ளார். தன்னுடைய ஓட்டுநர் பணி செய்திடாமல் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததால் தன்னுடைய மாத வருமானம் 20,000 ரூபாய் நஷ்டமடைந்துள்ளது என்று கூறியுள்ளார் அதற்குச் சரியான ஆதாரத்தை அவர் சமர்ப்பிக்கவில்லை. எனவே, அவரது மாத வருமானத்தை 12,000 ரூபாயாகக் கணக்கிட்டு வாகன உரிமையாளர் பிரதிவாதி ரவி சர்மா விபத்தினால் பாதிக்கப்பட்ட வாதி அமர்ஜித் பண்டிட் என்பவருக்கு 1,98,000/_ ரூபாய் நஷ்ட ஈடு வழங்கிட மோட்டார் வாகன விபத்துத் தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது வழக்குப் பதிவு செய்த நாளில் இருந்து மேற்கூறிய தொகையை 9 சதவீத வட்டியுடன் அளித்திட உத்தரவிட்டது. நஷ்ட ஈட்டுத் தொகையை முறைப்படி கட்டத் தவறினால் 12 சதவிகித வட்டியும் சேர்த்து செலுத்திட வேண்டும் என உத்தரவிட்டது. அந்தத் தொகை போதுமானதாக இல்லை என்று தோன்றினால் உயர் நீதிமன்றத்தில் அதுபற்றி மறுஆய்வு மனுதாக்கல் செய்திடலாம்.

---

# அரசியலமைப்புச் சட்டம் நமக்குத் தந்துள்ள அடிப்படை உரிமைகள்

தன்னுடைய 74வது குடியரசு வருகின்ற 2023வருடம் ஜனவரி மாதம் 26 ஆம் தேதி கொண்டாட இருக்கிறதுஇந்தியா. ஒவ்வொரு இந்தியரும் விழாவைக் கொண்டாடுகையில், ‘நாடு அளிக்கும் அடிப்படை உரிமைகளைப் போற்றுவோம்’ என்று முழங்குவது வழக்கம். நம் அரசமைப்புச் சட்டம் நமக்கு வழங்கியுள்ள சில முக்கியமான உரிமைகள் என்னென்ன தெரியுமா?

அரசமைப்புச் சட்டக் கூறுகள் 1418: சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உரிமை, சமயம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் காரணமாக யாரையும் பாரபட்சமாக நடத்தக் கூடாது.

அதேசமயம், கல்விரீதியாகப் பின்தங்கிய சமூகங்கள், பழங்குடிகள், பட்டியல் இனத்தவர், மகளிர் ஆகியோருக்குச் சிறப்பு ஒதுக்கீடு செய்து அர்த்தமுள்ள வகையில் சமத்துவத்தை ஏற்படுத்தலாம். சட்டக் கூறுகள் 1922: ஒவ்வொரு குடிநபருக்கும் சுதந்திர உரிமைகள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன, தனிமனிதச்சுதந்திரத்தை அரசு எந்தக் காரணத்துக்காக மட்டும் கட்டுப்படுத்தலாம் என்பதும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. சட்டக் கூறு 21: வாழ்வுரிமை, சுதந்திர உரிமை ஆகியவை முறையான சட்ட நடைமுறைகள் உதவியுடன் மனித கண்ணியத்தை வலுப்படுத்துவதற் கான பிரிவு. வாழ்வாதாரம், சுகாதாரம், கல்வி, சுற்றுச்சூழல், சிறைக்கூடங்களில் மனிதாபிமானத்துடன் நடத்துவது பற்றியது. சொத்துரிமை என்பது 1978ல் அடிப்படை உரிமைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. அந்தரங்க உரிமை சமீபத்தில் நீக்கப்பட்டது. எதேச்சாதிகாரமாகக் கைதுசெய்வதற்கும், காவலில் வைத்திருப்பதற்கும் எதிராகச் சட்டரீதியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சட்டக் கூறுகள் 2324: சுரண்டலுக்கு எதிரான உரிமைகள் இவற்றில் உள்ளன. சட்டக் கூறுகள் 2528: மதச் சார்பற்ற இந்தியா எல்லா மதங்களையும் சமமாக மதிக்கிறது, முழுமையான மதச் சுதந்திரம் உறுதிசெய்யப்படுகிறது. மனசாட்சிப்படி சுதந்திரமாக ஒரு மதத்தைப் பின்பற்றவும், பிரச்சாரம் செய்யவும் உரிமை அளிக்கப் படுகிறது. பொது ஒழுங்கமைதி, ஒழுக்கநெறி, நல்வாழ்வு ஆகியவற்றுக்கு ஊறு ஏற்படுத்தாமல் மத விவகாரங்களை நிர்வகிக்கச் சட்டக்கூறு 26 உரிமை வழங்குகிறது. சட்டக் கூறு 28, அரசு நடத்தும் கல்விக்கூடங்களில் மதரீதியிலான கட்டளைகளைச் செயல்படுத்த அனுமதி மறுக்கிறது



# தீயநோக்குடைய குற்றவழக்கீடு (அ) தீங்கிழைக்கும் வழக்கு (அ) பொய் வழக்கு (MaliciousProsecution)

## என்ன செய்வது, சட்ட ரீதியாக என்ன தீர்வு தேடுவது;

I.அக்ஷய் சாஜின்குமார் B.B.A,L.L.B(Hons)



சில சமயங்களில் குற்றவியல் குற்றச்சாட்டுகள் அல்லது சிவில் வழக்குகள் மற்ற தரப்பினரை மிரட்டி, துன்புறுத்துவதற்காகவோ, அவதூறு பரப்பும் நோக்கத்துடனோ அல்லது காயப்படுத்துவதற்காகவோ தீங்கிழைக்கும் வகையில் தாக்கல் செய்யப்படுகின்றன. இத்தகைய வழக்குகள் தான் தீங்கிழைக்கும் வழக்குகள் என்று அழைக்கப்படுகின்றன. காவல் துறை மூலமாக தொடர படும் வழக்குகளும் இதில் அடக்கம். ஒரு தரப்பினர் தெரிந்தே மற்றும் தீங்கிழைக்கும் நோக்கத்துடன் மற்ற தரப்பினருக்கு எதிராக ஆதாரமற்ற வழக்கைத் தொடங்கும்போது தீங்கிழைக்கும் வழக்கு நிகழ்கிறது. இது கிரிமினல் குற்றச்சாட்டுகள் மற்றும் சிவில் உரிமைகோரல் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது ஆகும். அதற்கான நடவடிக்கைக்கான காரணம் அடிப்படையில் ஒன்றே. அப்பாவி மக்களுக்கு நீதி வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நீதித்துறை மூலமாக அல்லது சேவை செய்யும் காவல்துறை மூலமாக சிலர் அவர்களுடைய சுயநலத்திற்காகவும், வேறொரு நபரின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கத்துடனும், இம்மாதிரியான வழக்குகளை தொடர்கிறார்கள்.

**தீங்கிழைக்கும் வழக்குக்கு இந்திய சட்டமுறைப்படி என்னென்ன தீர்வுகள் உள்ளன?**

**பொதுச் சட்டப் பரிகாரம்:**

தவறாக குற்றம் சாட்டப்பட்ட நபரின் அடிப்படை உரிமைகள் தீங்கிழைக்கும் வழக்கின் மூலம் மீறப்படுகின்றன. அதனால் பாதிக்கப்பட்டவர் /குற்றம் சாட்டப்பட்டவர் தனக்கு நேர்ந்த உடல், மன மற்றும் சமூக காயங்களுக்கு இழப்பீடு மற்றும் இதர பரிகாரங்கள் கோரி இந்திய அரசியலமைப்புச் சட்டம், உறுப்புகள் 32 அல்லது 226 இன் கீழ் உயர்நீதிமன்றத் தினையோ, அல்லது உச்சநீதிமன்றத் தினையோ, அதன் நீதிபேராணை வழங்கும் அதிகார வரம்பைப் உபயோகப் படுத்தி தனக்கு நீதி வழங்குமாறு வேண்டலாம். சிவில் சட்டத்தின் கீழ் இழப்பீடு பெறுவதற்கான உரிமை, இந்த பொதுச் சட்ட தீர்வைப் பயன்படுத்துவதால் ஒரு போதும் தடைபடாது.

**தனியார் சட்டப் பரிகாரம்:**

பகரப்பொறுப்புக் கோட்பாட்டின் கீழ், தவறாக வழக்குத் தொடரப்பட்ட ஒரு நபர், பணச் சேதத்திற்காக அரசு மீது வழக்குத் தொடரலாம். தவறாக வழக்குத் தொடரப் படும் நபர் இரண்டு வழக்குகளையும் ஒரே நேரத்தில் சமர்ப்பிக்கலாம்.

**குற்றவியல் சட்டப் பரிகாரம்:**

குற்றவியல் சட்டத் தீர்வு என்பது சம்பந்தப்பட்ட நபர் அல்லது அதிகாரிகளுக்கு எதிரான கிரிமினல் நடவடிக்கையாகும். இது சம்பந்தப்பட்ட அரசாங்கத்தால் அல்லது நீதிமன்றத்தால் எடுக்கப்பட வேண்டும். இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 167, 211 மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் 250 மற்றும் 358 மூலமாக, தீங்கிழைக்கும் வழக்குக்கு ஆளான ஒருவர், சம்பந்தப்பட்ட அரசு ஊழியர் அல்லது தனிநபர் மீது கிரிமினல் சட்டப் பரிகார நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிமன்றத்திடம் கோரலாம். இதிலும் இழப்பீடு கோர வழி வகைகள் உள்ளன. தீங்கிழைக்கும் வழக்கு குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடத்தில் மிக குறைவாக இருக்கும் நிலையில், வழக்கறிஞர் சங்கங்களும், பார் கவுன்சிலும் இதற்குண்டான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் முகாம்களை நடத்தி மக்களுக்கு விழிப்பூட்டலாம். மேலும், பொது மக்களின் நலன் கருதி மத்திய மற்றும் மாநில அரசுகள் இதற்கென்று ஒரு தனி சட்டம் நடைமுறைக்கு கொண்டு வருவது மிக நன்று.



# பாரம்பரியம் ஜல்லிக்கட்டு

சென்னையில் முதல் முறையாக ஜல்லிக்கட்டு போட்டி தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையொட்டி வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சுப்ரீம் கோர்ட் உத்தரவால் இடையில் தடை ஏற்பட்ட நிலையில் தமிழக அரசின் நடவடிக்கையால் தற்போது தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. ஜல்லிக்கட்டு என்றாலே அனைவருக்கும் அலங்காநல்லூர் பாலமேடு, அவனியாபுரம் தான் நினைவுக்கு வரும், இது தவிர சில கிராமங்களிலும் ஜல்லிக்கட்டு மிக சிறப்பாக நடத்தப்படுகிறது. மக்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்து கொண்டு இருக்கும் உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி வரும் 17ஆம் தேதி நடைபெற உள்ளது. ஆனால் தலைநகர் சென்னையில் இதுவரை நடத்தப்படவே இல்லை. ஜல்லிக்கட்டு மீண்டும் நடைபெற காரணமாக அமைந்தது தலைநகர் சென்னையில் உள்ள மெரினாவில் நடந்த தன் எழுச்சி போராட்டம் தான். எனவே சென்னையிலும் ஜல்லிக்கட்டு நடத்தப்படுமா என்ற கேள்வி எழுந்து வந்தது அதற்கு பதில் அளிக்கும் வகையில், சென்னையில் வரும் மார்ச் மாதம் முதல் முறையாக ஜல்லிக்கட்டு தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு வரும் மார்ச் 5ம் தேதி நடைபெற இருப்பதாகவும், அதில் 501 காளைகளுடன் மாடுபிடி வீரர்கள் களத்தில் இறங்க இருப்பதாகவும் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்துள்ளார்.



தமிழர் திருநாளான பொங்கலுக்கு அடுத்தநாள் மாட்டுபொங்கல் கொண்டாடப்படுகிறது. மாடுகளுக்கு அலங்காரம் செய்து அவற்றை வணங்கி, பொங்கல் வைத்து கொண்டாடப்படுகிறது. இதுதொடர்பாக தமிழ்நாடு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 70வது பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில், சென்னையை அடுத்த படப்பை பகுதியில் முதல் முறையாக ஜல்லிக்கட்டு போட்டியை மார்ச் 5ஆம் தேதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் தமிழகம் முழுவதிலும் இருந்து சிறந்த மாடுபிடி வீரர்கள் களம் இறங்குகிறார்கள். வீரர்களுக்கு காப்பீடு வழங்க ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்போட்டியில் 501 ஜல்லிக்கட்டு காளைகள் பங்கேற்கும், போட்டியில் முதல் இடம் பிடிக்கும் காளையின் உரிமையாளருக்கு காரும், வீரருக்கு இருசக்கர வாகனமும் பரிசாக வழங்கப்பட உள்ளது.

ஜல்லிக்கட்டு போட்டியை 10 ஆயிரம் பேர் வரை பார்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு மாதங்கள் வரை இருப்பதால் ஏற்பாடுகள் தொடங்கி நடைபெற்று வருகிறது என்று தெரிவித்தார்.



# சவால்களை எதிர் கொள்ளும் உதயநிதி

முன்பு தமிழக அரசியலில் பெரிய முக்கியத்துவம் பெற்ற துறையாக கருதப்பட்டதில்லை. ஆனால், தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்பியாட் நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கும் அரசு, எல்லா சட்டப்பேரவை தொகுதிகளிலும் விளையாட்டு மைதானங்களை திறக்கப்போவதாக அறிவித்திருக்கிறது.

ஆகவே, பணிகளை ஆய்வு செய்ய ஒவ்வொரு தொகுதிக்கும் செல்ல முடியும் என்பதோடு, எல்லாத் தொகுதியைச் சேர்ந்த மக்களோடும், தொண்டர்களோடும் உறவாடும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கும். ஆனால், இதையெல்லாம்விட அவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிறப்புத் திட்ட அமலாக்கம், பலரது கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. இதுதவிர, வறுமை நீக்கம் மற்றும் கிராமப்புற கடன் ஆகிய துறைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் துறைகளைப் பொறுத்தவரை, தனித் துறையாகச் செயல்படாமல் பல்வேறு அமைச்சகங்களிலும் திட்டங்களைச் செயல்படுத்தி, கண்காணிக்கும் துறை. பொதுவாக முதலமைச்சர்கள் வசமே உள்ள இந்தத் துறை தற்போது உதயநிதிக்கு வழங்கப்பட்டிருப்பது, அமைச்சரவையில் அவரது முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

உதயநிதி ஸ்டாலினுக்குக் கிடைத்திருக்கும் முக்கியத்துவம் கட்சிக்குள் வெளிப்படையாக எந்த எதிர்ப்பையும் எதிர்கொள்ளவில்லை. சொல்லப்போனால், அவருக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென மூத்த அமைச்சர்களே சொல்லும் நிலைதான் இருக்கிறது. ஊடகங்களிடம் பேசிய, உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, உதயநிதி ஸ்டாலின் துணை முதல்வரே ஆகலாம் என்றார். கட்சியின் முக்கியப் பதவிகளில் இருப்பவர்கள்

ஜெயலலிதா தலைமையிலான அதிமுக ஆட்சி குறித்துப் பேசும்போது, சாதாரண தொண்டர்களுக்குக் கூட திடீரென சட்டப்பேரவை உறுப்பினராகும் வாய்ப்பும் அமைச்சராகும் வாய்ப்பும் கிடைக்கும். வேறு கட்சிகளில் அந்த வாய்ப்பில்லை. குறிப்பாக, தி.மு.கவில் ஒருவர் கட்சிப் படிநிலைகளில் மேலேறி வர, பல ஆண்டுகள் ஆகும் என்பார்கள். ஆனால், சட்டப்பேரவை உறுப்பினராகி ஒன்றரை ஆண்டுகள் கூட நிறைவடையாத நிலையில், அமைச்சராகியிருக்கிறார் உதயநிதி ஸ்டாலின். திமுகவின் முதல் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தும், 2018ஆம் ஆண்டில்தான் தீவிர அரசியலில் ஈடுபடப் போவதாக அறிவித்தார் உதயநிதி ஸ்டாலின். அவரைப் பொறுத்தவரை, இந்த வளர்ச்சி அபாரமானதுதான். 2018ஆம் ஆண்டு அறிவிப்புக்குப் பிறகு, 2019ல் வந்த நாடாளுமன்றத் தேர்தலில் தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டார் உதயநிதி ஸ்டாலின். நாடாளுமன்ற தேர்தல் முடிந்த சில மாதங்களிலேயே திமுகவின் மிக முக்கிய அணியான இளைஞரணியின் செயலாளராக்கப்பட்டார் உதயநிதி.

இதற்குப் பிறகு, 2021ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்டு வென்ற உதயநிதி, அப்போதே அமைச்சராவார் என பேசப்பட்டது. ஆனால், அப்போது அமைச்சராக்கப் படாத நிலையில், ஒன்றரை ஆண்டுகள் கழித்து இப்போது அமைச்சராக்கப்பட்டிருக்கிறார். உதயநிதிக்கு அளிக்கப்பட்டிருக்கும் துறை, இதற்கு



அனைவரும் உதயநிதிக்கு ஊடகங்களில் வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, தங்களது சமூகவலைதள பக்கங்களிலும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். கட்சிக்குள் ஏற்கனவே அமைச்சர் அன்பில் மகேஷ் போன்றவர்கள், உதயநிதி ஆதரவுக் குழுவின் முக்கிய அங்கமாகச் செயல்பட்டு வருகின்றனர். உதயநிதி ஸ்டாலினின் அரசியல் நுழைவும் வளர்ச்சியும் குறுகிய காலத்தில் நடந்திருக்கிறது என்ற விமர்சனங்களில் உண்மையில்லாமல் இல்லை.

கடந்த 2017, 2018ல்கூட, தனது குடும்பத்திலிருந்து இனி யாரும் அரசியலுக்கு வரமாட்டார்கள் என்றுதான் மு.க. ஸ்டாலின் சொல்லிவந்தார். அதற்கு முன்பாக பல தருணங்களில் தான் அரசியலுக்கு வரப்போவதில்லை என உதயநிதி ஸ்டாலின் சொல்லியிருக்கிறார். 2021ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட உதயநிதிக்கு வாய்ப்பளிக்கவே மு.க. ஸ்டாலின் தயங்கியதாகச் சொல்லப்பட்டது. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில் எல்லாம் மாறிப் போயிருக்கின்றன.தனது 13 வயதில் 1966ஆம் ஆண்டில் கோபாலபுரத்தில் இளைஞர் திமுக என்ற அமைப்பைத் துவங்கி, அரசியலில் ஈடுபட ஆரம்பித்த மு.க. ஸ்டாலின் நெருக்கடி நிலை காலத்தில் சிறைக்குச் சென்றார்.

2006ல் அவர் அமைச்சராகப் பதவியேற்றபோது, கிட்டத்தட்ட நாற்பதாண்டு கால அரசியல் அனுபவம் அவரிடம் இருந்தது. கட்சிக்குள் நிலவரம் இம்மாதிரி இருந்தாலும் கட்சிக்கு வெளியில், குறிப்பாக பா.ஜ.க. போன்ற எதிர்க்கட்சிகள் உதயநிதியை முன்வைத்து தி.மு.கவை கடுமையாக விமர்சித்து வருகின்றன. வாரிசுகளுக்கு மட்டுமே தி.மு.கவில் எதிர்காலம் உண்டு என்ற குற்றச்சாட்டை அவர்கள் முன்வைக்கின்றனர். அ.தி.மு.கவின் தலைவர்களும் வாரிசு அரசியல் குற்றச்சாட்டை கடுமையாக முன்வைத்து வருகின்றனர்.

தமிழ் சினிமா உலகில் நடிப்பு, திரைப்படத் தயாரிப்பு, விநியோகம் என தீவிரமாகச் செயல்பட்டுவரும் உதயநிதி ஸ்டாலின் மாரி செல்வராஜ் இயக்கும் மாமன்னன் படத்திற்குப் பிறகு நடிக்கப்போவதில்லை என அறிவித்திருக்கிறார். ஆனால், அவரது ரெட் ஜெயன்ட் மூவீஸ் தொடர்ந்து தயாரிப்பு மற்றும் திரைப்பட விநியோகப் பணிகளில் ஈடுபடுமா என்பது தெரியவில்லை. அது தொடரும் பட்சத்தில், திரைப்பட விநியோகம் தொடர்பான சிறு பிரச்னைகூட அவரது அமைச்சர் பதவியுடன் இணைத்து விமர்சிக்கப்படும் வாய்ப்பு இருக்கிறது. "இவ்வளவு விமர்சனம் இருக்கும்போது, உதயநிதி ஸ்டாலின் கடினமாக உழைக்க வேண்டும். தேவையில்லாத பிரச்னைகளில் சிக்கிக்கொள்ளக் கூடாது. சில அதிருப்தியாளர்கள் கட்சிக்குள் இருக்கக்கூடும். அவர் சரியாக நடந்துகொண்டால், திமுகவின் வருங்கால முகமாக இவர் இருக்கக்கூடும். திமுகவில் இரண்டு பிரிவு இருக்கிறது. ஒன்று, கருணாநிதியின் கீழ் பணிபுரிந்தவர்கள். மற்றொரு தரப்பினர் முழுமையாகப் புதியவர்கள். அவர்களுக்கு உதயநிதியின் வளர்ச்சி பெரிய பிரச்னை கிடையாது" என்கிறார் மூத்த பத்திரிகையாளரான இளங்கோவன் ராஜசேகரன்.

ஆனால், அமைச்சரானதன் மூலமாகவே உதயநிதி தி.மு.கவின் அடுத்த தலைவர் என்பதை முடிவுசெய்துவிட முடியாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். "உதயநிதிக்கு முக்கிய துறைகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. அவர் கூர்மையாக கவனிக்கப்படுவார். அவர் எப்படி தன்னை மாற்றிக் கொள்கிறார் என்பதில்தான் எல்லாம் இருக்கிறது.


மார்னிங்
டைம்ஸ்
தமிழ் மாத இதழ்

மார்னிங் டைம்ஸ்
இதழில் தங்களின் மேலான
விளம்பரங்கள்
வரவேற்கப்படுகின்றன

தொடர்புக்கு:
8667867217
S.அப்துல் ரஹ்மான்



# டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் ஏற்படும் பிரச்சனைகள்

## தீர்வுகள் என்ன?...




யூ.பி.ஐ. எனப்படும் ஒருங்கிணைந்த கட்டண சேவை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து டிஜிட்டல் பண பரிவர்த்தனைகள் மிகவும் எளிமையாகிவிட்டன. சமீப காலங்களில் இந்த டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை செய்யும் முறையில் பலவித புதிய தொழில் நுட்பங்களை புகுத்தி அதனை இன்னும் மிகவும் எளிமையாக்க பல முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பண மதிப்பு இழப்பு மற்றும் கொரோனா பெருந்தொற்றின் விளைவால் டிஜிட்டல் முறையில் பணபரிவர்த்தனை செய்யப்படுவது பெரும் அளவில் அதிகரித்துள்ளது. டிஜிட்டல் வாலட்டுகள், நெப்ட்/ ஆர்.டி.ஜி.எஸ் (ழிணிதிஜி/ஸிஜிநிஷி), யூ.பி.ஐ, பேடிஎம், கூகுள் பே, பிம் ஆப், போன் பே மற்றும் பல செயலிகள் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை மிகவும் எளிமையாக மாற்றி விட்டன. இந்த சேவைகளின் மூலம் பணத்தை பெறுவதும் அல்லது வேறொருவருக்கு பணத்தை அனுப்புவதும் மிக மிக எளிமையாக உள்ளது. ஆனால் எந்த அளவிற்கு எளிமையாக மாறினாலும், அதே அளவிற்கு சில பிரச்சினைகளும் உருவாகின்றன. முக்கியமாக சமீப காலங்களில் யூ.பி.ஐ. மூலம் பணப்பரிவர்த்தனை செய்யப்படுவது குறைந்து வருகிறது.

இதற்கு முக்கிய காரணம் இந்த யூ.பி.ஐ. முறையில் செய்யப்படும் பணப்பரிவர்த்தனையின்போது நமக்கே தெரியாமல் தவறான யூ.பி.ஐ. கணக்கிற்கு பணத்தை அனுப்பி விட்டால் அதனை திரும்ப பெறுவது என்பது இயலாத காரியம். எனவே ஒரு வேளை நீங்கள் தவறுதலாக வேறொரு யூ.பி.ஐ. கணக்கிற்கு உங்களது பணத்தை அனுப்பி விட்டால் அதனை எந்த வழிகளில் திரும்ப பெற முடியும் என்பதை பற்றி பார்ப்போம். யூ.பி.ஐ. செயலியின் உதவிக் குழுவை அழைத்து பிரச்சினையை கூறலாம்: நீங்கள் எந்த செயலி மூலம் பணத்தை அனுப்பினீர்களோ அந்த செயலியின் உதவி குழுவை தொடர்பு கொண்டு நடந்த தவறை தெரிவிக்க வேண்டும். அனைத்து செயலிகளும் இது போன்ற பிரச்சினைகளை சமாளிப்பதற்காக தங்களுக்கென தனி வாடிக்கையாளர் சேவை குழுவை நிர்வகித்து வருகின்றன.

இரண்டாவதாக பிம் (ஙிபிமிவி) எனப்படும் பாரத் இன்டர்பேஸ் பார் மணி என்ற செயலியின் இலவச வாடிக்கையாளர் உதவி எண்ணான 18001201740 என்ற எண்ணிற்கு அழைத்து உதவி கேட்கலாம். இது பிரத்யேகமாக வாடிக்கையாளர்களின் கோரிக்கை மற்றும் புகார்களுக்கு என்று உருவாக்கப்பட்ட எண். அந்த எண்ணை தொடர்பு கொண்டு தவறாக பணப்பரிவர்த்தனை செய்யப்பட்டது தொடர்பான முழு விவரங்களை அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

* வங்கி உதவி பணம் தவறுதலாக அனுப்பப்பட்டதை உணர்ந்து கொண்ட மறுகணமே, அந்த யூ.பி.ஐ. ஐ.டி. மற்றும் அனுப்பிய பணத்தின் மதிப்பு ஆகிய விவரங்களை 'ஸ்கிரீன்ஷாட்' எடுத்து நீங்கள் எந்த கணக்கில் இருந்து பணத்தை அனுப்பினீர்களோ அந்த வங்கியின் ஈமெயில் அல்லது தொலைபேசி வழியாக இந்த தகவல்களை அனுப்பி அவர்களிடம் உதவி கேட்கலாம். முடிந்தால் அந்த வங்கியின் மேலாளரை சந்தித்தும் உதவி கேட்கலாம். இதுபோன்ற சமயங்களில் உங்களுக்கு உதவக்கூடிய ஒரே இடம் வங்கியாக மட்டுமே இருக்க முடியும். முடிந்த அளவு விரைவாக இதை நீங்கள் செய்ய வேண்டும். இதில் இன்னொரு பிரச்சினையும் ஏற்படுவது உண்டு. சில நேரங்களில் தவறான யூ.பி.ஐ. கணக்கிற்கு பணத்தை அனுப்பும் போது நீங்கள் தவறாக பதிவிட்ட யூ.பி.ஐ. ஐ.டி. செயல்பாட்டில் இல்லையென்றால், உங்களது பணம் உடனடியாக உங்களது கணக்கிற்கே திரும்பி வந்துவிடும். எனவே உங்கள் பணம் உடனடியாக திரும்பவில்லை எனில் நீங்கள் தவறுதலாக பதிவு செய்த யூ.பி.ஐ. கணக்கு வேறு ஒருவருடையது என்பதையும், அந்த பணம் அவர்களுக்கு சென்றுவிட்டது என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.



# காய்கறி தோட்டம் அமைக்கும் போது ..கவனத்தில் கொள்ள வேண்டியவை..



பொதுவாக காய்கறி தோட்டம் அமைக்கும் போது நாம் சில விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டும். மாடித் தோட்டம், வீட்டுத்தோட்டம், பால்கனியில் தோட்டம் என வீட்டின் எந்த பகுதியில் தோட்டம் அமைத்தாலும் செடிகளின் வகை மற்றும் தன்மையைப் பொறுத்து அவற்றின் இடம் மற்றும் பராமரிப்பை மேற்கொள்ள வேண்டும். பலரது வீட்டுத் தோட்டத்திலும் அதிகளவு இடம் பெறுவது காய்கறி செடிகளே. பொதுவாக காய்கறி தோட்டம் அமைக்கும் போது நாம் சில விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டும். காய்கறி தோட்டம் அமைப்பதற்கு சிறிது பொறுமையும், அதிக நேரமும் தேவை. அதேநேரம், காய்கறி தோட்டத்தால் நமக்குக் கிடைக்கும் பலன்களும் அதிகம். முதலில் வளர்க்க விரும்பும் காய்கறிகளின் பட்டியலைத் தயார் செய்யுங்கள். பின், அவற்றின் அளவை நிர்ணயம் செய்யுங்கள். வீட்டுக்குத் தேவையான அளவு எனில் அதற்கேற்றவாறு நம் நடவு முறையை மாற்றிக் கொள்ளலாம். முதன் முதலில் தோட்டம் அமைப்பவர்கள் புதினா, கொத்தமல்லி, கீரை, மிளகாய் மற்றும் தக்காளி போன்ற செடிகளில் இருந்து தொடங்கலாம்.

செடியின் வகையைத் தேர்வு செய்த பின்னர், அவற்றுக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்ற வேண்டும்; தேவையான சூரிய ஒளியின் அளவு, இடம் ஆகியவற்றை முன்னரே கணித்து பின் அந்த செடியை வளர்ப்பதற்கான இடத்தை நிர்ணயிக்க வேண்டும். சில காய்கறிச் செடிகள், கீரைச் செடிகளைஅதிக சூரிய ஒளியில் இருந்து காக்க, பச்சை வலையை செடியின் மேல் பொருத்தி, சிறிதளவு நிழலை உருவாக்கலாம். இது மணலை ஈரப்பதத்துடன் வைத்திருக்க உதவும்.

திறந்தவெளியில் தோட்டம் அமைப்பவர்கள், காய்கறி செடிகளுக்கென தனியே ஒரு இடத்தை ஒதுக்கி அதில் மட்டும் காய்கறி செடிகளை வளர்க்கலாம். மாடித்தோட்டம் அமைப்பவர்கள், பெரிய டிரே அல்லது தொட்டிகளில் செடி வளர்ப்பை தொடங்கலாம். ஒரே தொட்டிக்குள் இரண்டு முதல் மூன்று வகைச் செடிகளை வளர்க்கலாம். பால்கனியில் செடி வளர்ப்பவர்கள், அடுக்கு வடிவிலான தோட்ட அமைப்பை பின்பற்றலாம். இது குறைந்த இடத்தில் அதிக செடிகளை வளர்க்க உதவும். காய்கறி தோட்டம் அமைக்கும்போதே அதை எளிதாக பராமரிக்கும் வகையிலும், சுத்தம் செய்ய ஏதுவாக இருக்கும் வகையிலும் வடிவமைப்பது அவசியம். காய்கறி செடிகளைச் சுற்றியோ, அருகிலோ பூச்செடிகள் வளர்ப்பதைத் தவிர்க்கலாம். இது காய்கறி செடிகளில் வளரும் களைகளை அப்புறப்படுத்த இடையூறை உண்டாக்கும். அடுத்து உரம். செடியைத் தேர்ந்தெடுக்கும்போதே அவற்றுக்குத் தேவையான உரம் குறித்தும் அறிந்து வைத்துக்கொள்வது நல்லது. முடிந்தவரை வீட்டில் உரம் தயாரித்து பயன்படுத்தலாம். உரத்துடன் கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கியமான விஷயம் தண்ணீர். காய்கறி தோட்டம் வைத்திருப்பவர்கள் சரியான நேர இடைவெளியில் தண்ணீர் ஊற்ற வேண்டியது அவசியம். இதற்கு சொட்டு நீர் அல்லது மிஸ்டு முறையைக் கூட பின்பற்றலாம்.



## சிறந்த மனிதரின் சிறப்பான சேவை

சென்னை லாயிட்ஸ் சாலையில் வசிப்பவர் தான் A.சதாம் உசேன் இவர் ஆம்புலன்ஸ் ஓட்டுநராக பணி புரிகிறார். இதற்கு முன் ஆட்டோ ஓட்டி தனது குடும்பத்தை கவனித்து வந்த நிலையில் ஓய்வு நேரத்தில் தனது தந்தையுடன் இறந்த நபர்களை குளிப்பாட்டி இறுதி சடங்கு செய்யும் பணியினை செய்து வந்தார். இந்நிலையில் கொரோனா ஊரடங்கு காலக்கட்டத்தில் ஆட்டோ தொழில் முடங்கியிருந்த நிலையில் இவரும் இறந்த வருக்கு இறுதி சடங்கு செய்வது மற்றும் ஆம்புலன்ஸ் சேவை செய்யும் பணியினை செய்துவந்தார். இதுவரை கொரானா தொற்றால் பாதிக்கப்பட்டு இறந்துபோன 100க்கும் மேற்பட்ட உடல்களை அடக்கம் செய்துள்ளார். மேலும் வசதியில்லாத ஏழை, எளிய மக்களுக்கு கட்டணமின்றி இறுதி சடங்குகள், ஆம்புலன்ஸ் சேவை செய்து வருகிறார். இவரின் சேவையை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

# உடலில், நீர் எடையைக் குறைக்கும் வழிகள்

உணவில் அதிக அளவு உப்பு சேர்த்துக் கொள்ளும்போது, உடனடியாகத் தண்ணீரை உடலில் தக்க வைக்கத் தூண்டும். இதனால், எடை அதிகரிக்கும்.

நமது உடலில் இருக்கும் தேவையற்ற தண்ணீர், வியர்வை மற்றும் சிறுநீர் வழியாக வெளியேறும். பெண்களுக்கு மாதவிடாய் சுழற்சி மற்றும் கர்ப்ப காலங்களில் உடலில் நீர் தேக்கம் ஏற்படுவது இயல்பானது. ஒரு சிலருக்கு உணவில் அதிக அளவு உப்பு சேர்த்தல் மற்றும் ஹார்மோன் மாற்றங்கள் காரணமாக அதிகப் படியான தண்ணீர், திசுக்களுக்கு இடையில் சேமிக்கப்படும். இதனால் உடல் எடை அதிகரிக்கும். சில எளிய வழிகளை கடைப்பிடிப்பதன் மூலம் இத்தகைய நீர் எடையைக் குறைக்க முடியும். அதைப் பற்றி இங்கே தெரிந்துகொள்வோம்.



உப்பு அதிகம் உள்ள உணவுகளை குறைப்பதுதான் உடல் எடை குறைப்பின் முதல் விதி. உணவில் அதிக அளவு உப்பு சேர்த்துக் கொள்ளும்போது, உடனடியாகத் தண்ணீரை உடலில் தக்க வைக்கத் தூண்டும். இதனால், எடை அதிகரிக்கும். பதப்படுத்தப்பட்ட உணவுகள், சீஸ், இறைச்சி போன்றவற்றில் உப்பு அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. எனவே, உப்பைத் தவிர்த்து காய்கறி, பருப்பு, சத்துள்ள தானியங்கள் ஆகியவற்றை சாப்பிடும்போது, உடல் எடை குறையும்.

உடலில் இருந்து தேவையற்ற நீர் மற்றும் உப்பு வெளியேறும்போது, உடல் இயக்கமும், சிறுநீரக செயல்பாடும் சீராக நடைபெறுவதற்கு போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். பெரியவர்கள், தினமும் குறைந்தபட்சம் 2 லிட்டரும், சிறியவர்கள் 1.5 லிட்டரும் தண்ணீர் அருந்த வேண்டும்.

உடல் எடைக் குறைப்பில் சத்தான உணவு, உடற்பயிற்சி ஆகியவற்றுடன் சீரான தூக்கம் முக்கியமானது. அதன் மூலம் ஹார்மோன் சுரப்பிகள் சரியாக இயங்கும். தினமும் 7 முதல் 9 மணி நேரம் வரை உறங்குவது அவசியம்.

கார்போஹைட்ரேட்டுகளைக் குறைப்பதால், கிளைகோஜன் அளவைக் குறைக்கலாம். இதன் மூலம் உடலில் இருக்கும் அதிகப்படியான தண்ணீர் வெளியேறி எடை எளிதாகக் குறையும். ரொட்டி, அரிசி, பாஸ்தா உள்ளிட்ட உணவுகளில் கார்போஹைட்ரேட் அதிக அளவில் உள்ளது. புரத உணவுகளை அதிகமாக எடுத்துக்கொண்டு கார்போஹைட்ரேட் உணவுகளைக் குறைக்கும் போது, உடல் எடையை எளிதில் குறைக்கலாம்.

# மெதுவாக சாப்பிடுவதால் உடல் எடை குறையுமா?

மெதுவாக, உணவை நீண்ட நேரம் சாப்பிடும்போது, குடலில் சுரக்கும் ஹார்மோன்களுக்கு, 'உடலுக்குத் தேவையான அளவு உணவு கிடைத்துவிட்டது' என்று மூளையில் இருந்து சமிக்ஞைகளை அனுப்பும். சுமார் 20 நிமிடத்துக்கு மேல் சாப்பிடும்போது, வயிறு நிறைந்த திருப்தி உண்டாகும். மெதுவாக சாப்பிடுவதால் உடல் எடை குறையும் என்ற கருத்து பலரிடம் உள்ளது. 'ஸ்லோ ஈட்டிங்' என்பது நாம் சாப்பிடும் உணவின் அளவை குறைக்கும். இதனால் இயல்பாகவே உடல் எடையைக் கட்டுக்குள் வைக்கலாம்.



'லெப்டின் மற்றும் க்ரெலின்' எனும் இரண்டு ஹார்மோன்களும் பசிக்குத் தொடர்புடையவை ஆகும். இதில் 'லெப்டின்' உடலுக்குத் தேவையான கலோரியின் அளவு மற்றும் பசியைக் கட்டுப்படுத்தும். உடல் எடை இழப்புக்கு உதவும். 'க்ரெலின்' பசியைத் தூண்டும். உடல் எடையை அதிகரிக்க உதவும். மெதுவாக, உணவை நீண்ட நேரம் சாப்பிடும்போது, குடலில் சுரக்கும் ஹார்மோன்களுக்கு, 'உடலுக்குத் தேவையான அளவு உணவு கிடைத்துவிட்டது' என்று மூளையில் இருந்து சமிக்ஞைகளை அனுப்பும். சுமார் 20 நிமிடத்துக்கு மேல் சாப்பிடும்போது, வயிறு நிறைந்த திருப்தி உண்டாகும். மேலும், மெதுவாக உணவு சாப்பிடும்போது உணவில் உள்ள சுவையையும், வாசனையையும் நம்மால் நன்றாக உணர முடியும். அதேநேரம், சுவை யின் இன்பத்தை ரசிக்கும் போது சாப்பிடும் நேரம் இரட்டிப்பாகும். இது சாப்பிடும் உணவின் அளவை தன்னிச்சையாக குறைக்கும்.

உணவின் சுவைக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது இயற்கை மற்றும் ஆரோக்கியமான உணவுகளே அதிகமாக உணவு விருப்பப்பட்டியலில் இடம் பெறும். அடுத்த முறை உணவு உண்ணும்போது, சுவையின் திருப்தியை நாம் அடைந்தவுடன் பசியின்மை ஏற்படும். உணவை நன்றாக மென்று சாப்பிடும்போது, உணவுப் பொருட்கள் வாயில் உள்ள உமிழ் நீருடன் கலக்கும். உமிழ்நீரில் உயிரியல் ரீதியாக செயல்படும் பொருட்கள் உள்ளன. ஆகையால், இது உணவு செரிமானத்தை வாயில் இருந்தே தொடங்குகிறது.

மெதுவாக சாப்பிடும்போது உணவு வயிற்றை சென்றடைய 20 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளும். இது வயிற்றின் வேலையை மிகவும் எளிதாக்குவதுடன், சாப்பிட்ட உணவை எளிதில் செரிமானம் அடையச் செய்யும். இதனால், நாம் அடுத்த வேளை உணவு சாப்பிடும்போது இயல்பாகவே உற்சாகம் ஊற்றெடுக்கும்.

# கடை வாடகைக்கு அணுகவும்

No.37,(15/2) ஆறுமுக ஆச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
வாடகைக்கு கடை அல்லது அலுவலகம் தரை தளம்,
(பாத்ரூம் வசதியுடன்)

**மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ள**

## 98403 15333

## GOOD FOOD TRADERS

CHENNAI

**DISTRIBUTOR & WHOLESALER FOR FOOD PRODUCTS**

Frozen foods & Snacks / Bakery Raw Materials & Baking Tools
Sauces & Dips / Seasonings / Hotel Fast Food Etc

MOHAMMED RASUL
Proprietor
+91 94441 04381

# 120,Jhani Jhan Khan Road
Royapettah,Chennai – 600014.
+91 89258 38382
Goodfoodtraders2021@gmail.com

## GENUINE DECORS

Mobile : 9840909981
9597195357

## MOSQUITO NET

SAINT-GOBAIN COMPANY IS WELL KNOWN MARKET LEADER IN ALL ITS BUSINESS INCLUDING INSECT SCREEN
Rexine Cloth & Dining Cloth, Cushion Cover for Furniture of Exiting
SAINT - GOBAIN Insect Screens are made up of fiber Glass Material Advantages of which are

1. Allows Circulation of freshair
2. Abundant Natural Light
3. Easily Washable
4. Easy to Install
5. Stretch Proof & Durable

We also make window type, Door Type Mosquito SS net - 304L in excellent finish

# AL - ALEEM TUITIONS

**(Since 2017)**

AL-ALEEM TUITION CENTRE

New No.42/2, Old No.8, S.S.House, Thirunavukkarasu Street,
Triplicane, Chennai - 600 005.
Mob, Whatsapp, Telegram: 9500029543/9500013543
website - www.alaleemtuitioncentre.com

Grade: K.G to 12th Std

Mode: Offline / Online

Timings : 5.00 P.M to 9.00 P.M (Batch Wise 2 hrs)

Subjects : All Subjects with Proficient Tutors (or) Teachers

Language : English, Tamil, Hindi, Arabic

Boards : IGCSE, ICSE, CBSE, XSEED, ANGLO-INDIAN, SAMACHEER, NIOS

Features : .CCTV Enabled, Writing Correction, 100% Result, Positive Atmosphere, Counselling for Students, Regular Parents Meeting, Competitions for Children, Online Home Schooling, Learning Disability Support, Regular Monitoring on Students Progress



## ZUM ZUM OPTICALS

**PH: 9840600710**






ZEISS Crizal VARILUX HOYA GKB HI-TECH LENSES Precision Optics essilor

BLUE FILTER & BLUE CUT LENS AVAILABLE

#120, BAKER STREET, BROADWAY, CHENNAI - 108.
EMAIL : zumzumopticals@gmail.com

## 4.5 சவரன் தாலிச்செயினை கண்டெடுத்து

# உரிமையாளரிடம் ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுநருக்கு பாராட்டு





சென்னை, வில்லிவாக்கத்தைச் சேர்ந்த சதிஷ்குமார், 40 என்பவர் அவரது மனைவியுடன் 23.01.2023 அன்ற தீவுத்திடல், அரசு சுற்றுலா பொருட்காட்சி சென்று, இரவு சுமார் 10.00 மணிய ளவில், நுழைவு வாயில் –1 அருகே ஒரு ஆட்டோவில் வில்லிவாக்கம் செல்ல கூறிய போது, சதிஷ்குமார் அந்த ஆட்டோ ஓட்டுநரிடம் Gpay உள்ளதா என கேட்டபோது, அந்த ஆட்டோ ஓட்டுநரிடம் Gpay இல்லாததால், அருகில் இருந்த வியாசர்பாடி, சத்யமூர்த்தி நகர், 27வது பிளாக்கைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் லுயிஸ், 52 என்பவர் தன்னிடம் Gpay உள்ளது எனக்கூறி, சதிஷ்குமாரிடம் இருந்து Gpay மூலம் பணம் பெற்று, லூயிஸ் தன்னிடமிருந்து பணத்தை அந்த ஆட்டோ ஓட்டுநரிடம் கொடுத்துள்ளார்.

இரவு சுமார் 11.00 மணியளவில் வில்லிவாக்கத்தில் உள்ள தனது வீட்டிற்கு வந்தடைந்த சதிஷ்குமார், Gpay செல்போனை கொண்டு ஆட்டோ ஓட்டுநர் லூயிஸை தொடர்பு கொண்டு, தீவுத்திடல் அருகே ஆட்டோவில் செல்ல தான் Gpay செய்த விவரங்களை கூறி, தனது மனைவியின் 4.5 சவரன் எடை கொண்ட தாலிச்சரடு பொருட்காட்சியை கண்டுவிட்டு வரும் வழியில் காணாமல் போனதாகவும், அங்கு உள்ளதா என பார்த்து கூறும்படியும் கேட்டுள்ளார். ஆட்டோ ஓட்டுநர் லூயிஸ் தற்போது ராயப்பேட்டையில் உள்ளதாகவும் சவாரி முடித்து சென்று பார்க்கிறேன் எனக் கூறி, நள்ளிரவு சுமார் 12.00 மணியளவில், லூயிஸ் தீவுத்திடல் நுழைவு வாயில்1 அருகே தேடி பார்த்ததில், தாலிச்சரடு இருந்ததை கண்டு எடுத்தார். பின்னர், சதிஷ்குமாருக்கு தொடர்பு கொண்டு, விவரங்களை கூறி காலையில் பெற்றுக் கொள்ளுமாறு கூறியுள்ளார். ஆனால் மறுநாள் (24.01.2023) சதிஷ் குமார் செல் போனை எடுக்காததால், லூயிஸ் தன்னி டமிருந்து 4.5 சவரன் தங்க தாலிச்சரடை தனது வீட்டினருகே உள்ள P-3 வியாசர்பாடி காவல் நிலையத்தில் ஒப்படைத்து விவரங்களை கூறினார்.

பின்னர் P-3 வியாசர்பாடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சதிஷ்குமாரை வரவழைத்து, விசாரணை செய்து, 4.5 சவரன் தாலிச்சரடை சதிஷ்குமாரிடம் ஒப்படைத்தனர். மேற்படி சம்பவங்களில் சிறப்பாக பணிபுரிந்த காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் நேர்மை யாக செயல்பட்ட 2 ஆட்டோ ஓட்டுநர்களை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால் 30.1.2023 நேரில் அழைத்து சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டினார்.

K.N.Abdul Razack
9171721973
9043555124
knabdulrazak@gmail.com
abcwebsite.com
686, Ayub Sait Street
Bilal Nagar
Kanathur

AMS SIGN
All Sign Board

# இஸ்லாமிய ஆன்மீகத்தின் பொக்கிஷம்



சென்னை, நெமிலியில் பிலாலியா அரபிக் கல்லூரியானது இரட்டைக் கல்வியின் புதிய முன்னுதாரணத்தை வடிவமைப்பதில் முதலும் முன்னோடியாகவும் 1996 முதல் இன்றுவரை அல்லாமா அல்ஆரிஃப்பில்லா, ஆஷிகுர் ரசூல் அல் ஹாஜ் பிலாலிஷா ஜுஹுரி ஹழ்ரத் கிப்லா (நிறுவனர், பிலாலியா அரபிக் கல்லூரி, சென்னை) மற்றும் மௌலானா மௌலவி, அஃஸலுல் உலமா, ஜுஹுரிஷாஹ் பிலாலி ஹழ்ரத் கிப்லா ஜானஷீன் சில்சிலா யே பிலாலியா (தாளாளர், பிலாலியா அரபிக் கல்லூரி, சென்னை) அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலமாக மாணவர்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

பூமிற்கு கீழே பொக்கிஷம் இருக்கும் என்பார்கள். ஆனால் எங்களுக்கு அல்லாஹ் பூமிற்கு மேலே அல்லாமா அல்ஆரிஃப்பில்லா, ஆஷிகுர் ரசூல், அபுல் அம்ஸால், ஷைகே காமில், அல் ஹாஜ் பிலாலிஷா ஜுஹுரி ஹழ்ரத் கிப்லா எனும் பொக்கிஷத்தை கொடுத்தான்.

அந்த பொக்கிஷத்தின் மூலம் எங்களுக்கு கிடைத்த ஆன்மீக ஞானங்கள் மற்றும் அவர்கள் நாவில் என்றென்றும் போற்றி புகழும் எங்கள் பெருமானார் அலைஹி வஸல்லம் சொற் பொழிவுகள் பல. யா அல்லாஹ் அவர்களுக்கு உடல் ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும், ஆன்மீக சீடர்கள் (முறிதுகள்) அனைவருக்கும் அவர்களின் சொற்பொழிவுகளை என்றென்றும் கேட்கும் பாக்கியத்தையும் தந்தருள்வாயாக அல்லாஹ்!! ஆமீன்!!!

இவன்
**K.N.அப்துல் ரஜாக் பிலாலி**
**கானத்தூர்**





Published and Printed by **S.ABDUL RAHMAN** Printed at **CHENNAI OFFSET PRINTERS,**
No.19/1, 21/2, Kitabathkhan Bhadur Street, Ellies Road, Chennai - 600 002. and Published from
No. 15/9, Thondaikhan Makhan 2nd Lane, Ice House, Triplicane,Chennai - 600 005.
Editor : **K.N.ABDUL SAMAD** Cell : **9600011993**


BILALIA ARABIC COLLEGE CHENNAI - 603 104
26 YEARS
BILALIA
ARABIC COLLEGE
An Academy of Islamic & Secular Studies
ADMISSION
2023-24
7 YEARS COURSE FOR:
Moulavi Aalim, Afzal ul Ulama
B.com, B.B.A, B.C.A, B.sc, B.A
Eligibiity:
* Must be able to recite Quran fluently
* Must have passed 8th standard in English Medium
* Must be able to read and write fluently in Tamil and English
* Must pass the entrance exam
CALL NOW!
90929 92877
95514 21721
Follow Us on Social Media
SCAN FOR MORE!
BILALIA ARABIC COLLEGE


BILALIA ARABIC COLLEGE CHENNAI - 603 104
الجامعة العربية البلالية
பிலாலியா அரபிக் கல்லூரி
(ஒரு இஸ்லாமிய மற்றும் உலகியல் கல்விக்கூடம்)
26 YEARS
சேர்வதற்கான தகுதிகள்
சரளமாக குர்ஆன் ஓத தெரிந்திருத்தல்.
8 ஆம் வகுப்பு ஆங்கில வழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்.
தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழி எழுத படிக்க தெரிந்திருத்தல்.
நுழைவுத்தேர்வில் வெற்றி பெறுதல்.
2023 - 2024
அட்மிஷன்
நடைபெறுகிறது
பதிவு செய்ய ஸ்கேன் செய்யவும்
bilalia.in
தொடர்புக்கு
+91 90929 92877
+91 95514 21721
7 வருடங்கள் முழுமையாக பயின்று
மௌலவி ஆலிம் பட்டம்
சென்னை பல்கலைகழகத்தின் அஃப்ழலுல் உலமா பட்டம்
B.Com / BBA / BCA / B.Sc /B.A., ஆகிய ஏதேனும் இளங்கலைப் பட்டம்
#107 ECR ஹைவே, நெம்மேலி, சென்னை 603104.

REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA-TNTAM/2021/81736 MORNING TIMES - TAMIL MONTHLY







"அரசியல் அறிவோம், ஆளுமை செய்வோம்"

இடம்
YMCA
மைதானம் (OMR)
கொட்டிவாக்கம்

75 Years of Responsible Politics
IUML
PLATINUM JUBILEE
CONFERENCE 2023 March 09,10-CHENNAI

மார்ச்–10
2023

# இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக்

## 75-வது ஆண்டு பவள விழா அகில இந்திய மாநாடு

தேசியத் தலைவர்

**பேராசிரியர். K.M. காதர் மொகிதீன்** Ex.MP.

... அழைக்கிறார் ...

பங்கேற்று சிறப்புரை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**மு.க.ஸ்டாலின்** அவர்கள்

அலைகடலென திரண்டு
வாரீர்... வாரீர்.. வாரீர்...



**மயிலை பகுதி சென்னை மேற்கு மாவட்டம்**